...stered No. M. 2330.

5 AUG 1928 MADRAS

ஓம்

# சித்தாந்தம்

“எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறென் றறியேன் பராபரமே”


| மலர் க | பிரபவ ஆண்டு ஆடித் திங்கள்<br>1928 ௵ ஆகஸ்டு ௴ | இதழ் ௪ |
|---|---|---|


உள்ளுறை — பக்கம்


சைவ சமயம் ... ... மறைமலையடிகள் ... 169

கால இயல் ... ... உதவிப் பத்திராசிரியர் ... 173

நம்பியாரூரர் தேவாரம்... ... E. N. தணிகாசல முதலியார், B. A., B. L. ... 180

சமய உணர்வும் ஆராய்ச்சி யறிவும் ... காழி. சிவ. கண்ணுசாமி, B.A.... 187

செய்தித் திரட்டு ... ... ... 191



பத்திராசிரியர்

மணி. திருநாவுக்கரசு முதலியார்,
ஆசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

உதவிப் பத்திராசிரியர்

வித்துவான்

பாரிப்பாக்கம் - கண்ணப்ப முதலியார்



சைவ சித்தாந்த மகாசமாஜ காரியாலயம்,
92, வரதா முத்தியப்பன் தெரு,
சென்னை.

1928

[illegible]

[illegible] 8

[illegible] 1928.

JL
R673 m211, N28
N128·1·8·
187122

# சித்தாந்தம்

ஓர் உயர்ந்த மாதாந்த தமிழ்ப் பத்திரிகை

சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் சார்பிலே திங்கடோறும் வெளிவரும் உயர்ந்த தத்துவப் பத்திரிகை. சைவ சித்தாந்தத்தின் உண்மை நிலையை உணர்த்து முகத்தான் பல சமயக் கொள்கைகளையும் எடுத்துரைப்பது. செந்தமிழ் நடையிலே தெளிவாக எழுதப்படும் பல இனிய அரிய கட்டுரைகளை உடையது. ஆங்கிலமொழி பெயர்ப்பான அழகிய கட்டுரைகளையும் ஆங்காங்குக் கொண்டு மிளிர்வது. தமிழறிவைப் பெறுவதற்கும் சைவ உண்மைகளை உணர்வதற்கும் ஒரு பெருந் துணையாயது.

சந்தா விவரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆண்டு 1-க்கு தபாற்கூலி யுட்பட | உள் நாடு (இந்தியா, பர்மா, சிலோன்).... | ரூ. | 1 | 8 | 0 |
| | வெளி நாடு .... .... | ,, | 2 | 0 | 0 |

குறிப்பு :—ஓராண்டிற்குக் குறைந்த சந்தா கிடையாது.

(1) பத்திரிகை ஆங்கில மாதம் 10-ந்தேதி வெளிவரும்.

(2) சந்தாத் தொகையை முன்னரே செலுத்தியாவது அல்லது வி. பி. யில் செலுத்தியாவது பத்திரிகை பெற்றுக்கொள்ள வேண்டும். வி. பி. யில் பத்திரிகை பெறுபவர்கள் அணா இரண்டு ரிஜிஸ்டிரேஷனுக்காகத் தனியே செலுத்தவேண்டி யிருப்பதால் மணியார்டர் மூலம் பணம் அனுப்பிப் பத்திரிகைப் பெற்றுக்கொள்ளுதல் நலம்.

(3) கடிதம் எழுதும் பொழுதெல்லாம் ஒவ்வொருவரும் தங்கள் சந்தா எண்ணைக் குறிப்பிட்டு எழுதுதல் வேண்டும்.

(4) ஆண்டினிடையில் சேருகிறவர்கட்கு முன் பத்திரிகைகள் கூடிய வரை அனுப்பப்படும்.

(5) பத்திரிகை சேராதவர்கள் அவ்வம்மாதம் 20-ந் தேதிக்குள் எழுதித் தெரிந்துகொள்ள வேண்டும். அப்படித் தவறினவர்கள் பத்திரிகையின் கிரயம் அணா 2½ அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

(6) இடம் மாறுபவர்கள் அடுத்த பத்திரிகை தங்களுக்கு வந்து சேரும் வண்ணம், தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துகொண்டு, புது விலாசத்தை நமக்கு உடனே அறிவித்தல் வேண்டும்.

(7) வியாச மெழுதுபவர்கள் கடிதத்தின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதி அனுப்ப வேண்டும். ராஜ நிந்தனை, மத தூஷணை, மனித தூஷணை முதலியவைகளும் சைவ சித்தாந்தத்திற்குப் பொருத்தமில்லாத விஷயங்களும் பிரசுரிக்கப்பட மாட்டா. வியாசங்களைத் திருத்தவும், நிறுத்தவும் ஆசிரியருக்குப் பூரண உரிமை யுண்டு.

(8) வியாசதாரர்களின் அபிப்பிராயங்கட்கு ஆசிரியர் உத்திரவாதியல்லர்.

(9) சந்தாதாரர்களும், கட்டுரையாளர்களும் பதில் விரும்பின் தயை செய்து ரிப்ளை கார்டாவது, தபால் பில்லையாவது அனுப்பி வைத்தல் வேண்டும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (10) விளம்பர விகிதம் | முழுப் பக்கம் | ரூ. | 10 | 0 | 0 |
| | அரைப் பக்கம் | ,, | 5 | 0 | 0 |
| | கால் பக்கம் | ,, | 3 | 0 | 0 |

(11) சந்தா விவரங்கட்குக் கீழ்வரும் விலாசத்திற்கு எழுத வேண்டும்.

காரியதரிசி :—

சித்தாந்தம் ஆபீஸ்,
சைவ சித்தாந்த மகா சமாஜம், ஜார்ஜ்டவுன், சென்னை.

ஓம்

# சித்தாந்தம்

“எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே”

| மலர் க | பிரபவ ஆண்டு ஆடித் திங்கள்<br>1928 ௵ ஆகஸ்டு ௴ | இதழ் ௮ |
|---|---|---|

## சைவ சமயம்

[மறை மலை யடிகள்]

‘சைவ சமயம்’ என்பது இவ்விந்திய நாடு எங்கும் உள்ள தமிழ் நன்மக்களால் எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னே தொட்டுக் கைக் கொள்ளப்பட்ட கடவுட் கொள்கையாகும். அஃது அவர்களை அறிவிலும் உருக்கத்திலும் ஒழுக்கத்திலும் மேமேலுறச்செய்து, மற்றை நாட்டவர்க்கு இல்லாத் தனிப்பெருஞ் சிறப்பினை அவர்கட்கே தந்து, மற்றைச் சமயங்களுக் கெல்லாம் மேலான தனி நிலையில் வைகி விளங்குவது. அது, தமிழ் நன்மக்களை அறிவில் மேம்பட்டு விளங்கச் செய்தது எப்படியென்றாற், கூறுதும்: இந்நில வுலகத்தில் எங்கும் உள்ள எல்லா மக்களும், அவர்கள் நாகரிகத்திற் சிறந்திருப்பினும் நாகரிகம் இல்லாக் காட்டு வாழ்க்கையி லிருப்பினும், எல்லாரும் ‘கடவுள் ஒருவர் உண்டு’ என்னும் உணர்ச்சியும் அக்கடவுளை வணங்கும் விருப்பமும் உடையராய் இருக்கின்றனர். மக்கட் பிரிவினர் எல்லார் வரலாறுகளையும் மிக நுணுக்கமாக ஆராய்ந்து வரலாற்று நூல்கள் எழுதியிருக்கும் ஆங்கில ஆசிரியர்கள் ‘கடவுளுணர்ச்சி யில்லாத ஒரு மக்கட் கூட்டத்தாரை ஓரிடத்துங் காண்டல் இயலாது’ என்று முடிவு கட்டிச் சொல்லுகின்றார்கள். நமது நாட்டிலும் மிகத் தாழ்ந்தோர் முதல் மிக உயர்ந்தோர் ஈறாக உள்ள எத்திறத்தாருங் கடவுளுணர்ச்சியும், அவ்வுணர்ச்சிக்கு ஏற்ற பலவகையான வணக்க முறைகளும் உடையராய் இருத்தலை நாடோறும் நாம் எங்குங் கண்டு வருகின்றோம். ஆகவே, கடவுளுணர்ச்சியுங் கடவுள் வணக்கமும் இல்லாமல் மக்களாய்ப் பிறந்தவர்கள் உயிர் வாழ்தல் இயலா தென்பது இனிது விளங்கும்.

இனி, மக்கள் எல்லாரும் ஏன் இங்ஙனங் கடவுள் உணர்ச்சியுங் கடவுள் வணக்கமும் உடையரா யிருக்கின்றனரென்றால், அவர்க[illegible] உடம்பின் துணையும்[illegible]த் தின் [illegible]ம், இந்த

பின் வழியே அவனது அறிவின் ஏற்றத்தைக்கண்டு நாம் வியந்து மகிழுந்தோறும் நமதறிவும் முறைமுறையே விரிந்து பேரொளியோடும் விளங்கா நிற்கும். இவ்வாறு இறைவன்றன் அறிவாற்றல் அருளாற்றல்களை அறியுமுகத்தானன்றி, நமக்கு உயர்ந்த அறிவு விளக்கம் உண்டாதற்கு வேறு வழி இல்லை. இவ்வாற்றாற் சைவ சமயமானது, மக்களுக்கு உரிய அறியாமையும், பிறப்பு இறப்பும் இல்லாப் பெருமுதற் கடவுளான சிவபெருமான்றன் அறிவாற்றல் அருளாற்றல்களை விளக்கும் வழியே மக்களெல்லாரையும் பேரறிவு நிலைக்குச் செலுத்துவதோர் ஒப்பற்ற கொள்கையாதலை உணர்ந்து கொண்மின்கள் !

எல்லாம்வல்ல இறைவன் இவ்வுலகத்தையும் இவ்வுலகத்துப் பொருள்களையும் படைத்து, அவற்றின் நடுவே இவ்வியப்பான இவ் வுடம்புகளிற் புகுத்தி நம்மை வாழச் செய்திருக்கும் வகையினை உற்றுநோக்கும் நுண்ணறிவாளர், இங்ஙனம் அவன் செய்திருப்பது ஒரு சிறந்த நோக்கம் பற்றியேயல்லாமல் வெறும் பாழுக்காக அன்றென உணர்வர். அச்சிறந்த நோக்கம் யாதோவென்றால், நாம் அறிவும் இன்பமும் இவையென உணர்ந்து, நமக்கு இயற்கையாய் உள்ள அறியாமையுந் துன்பமுங் களைந்து, என்றும் அழியாப் பேரின்பத்தில் நாம் நிலைபெறுயிருக்க வேண்டு மென்பதே அதுவாம். உலகத்தின்கண் உள்ள அரிய காட்சிகளையும், இனிய ஒலிகளையும், தீஞ்சுவைகளையும், நறுமணங்களையும், மென்பொருள்களையுங் கண்டு கேட்டு சுவைத்து உயிர்த்துத் தொட்டு உணர்தலாலும், அறிவால் மிக்க சான்றோரொடு பழகி அவர் ஆக்[illegible] நூல்களை ஆராய்ந்து அறிதலாலும் யாம் நாளுக்கு நாள் அறிவும் இன்பமும் இவையென உணர்ந்து அவற்றால் மேன்மேல் உயர்ந்து வருகின்றனம் அல்லமோ ? ஆகவே இறைவன் இவ்வுலக வாழ்க்கையினை வகுத்தது, நாம் அறிவில் வளர்ந்து அவனது பேரின்பத்திற் சென்று நிலைபெறுதற் பொருட்டேயாமென்பது நன்கு துணியப்படும். நாம் கடவுளின் பேரறிவினையும் பேரின்பத்தினையும் அறிதற்குக் கருவிகளாகவே அறிவையும் இன்பத்தையும் சிறிது சிறிதே காட்டும் இவ்வுலகத்துப் பொருள்களையும் இவ்வுடம்புகளையும் இறைவன் அமைத்தனனே யல்லாமல் இப்பொருள்களும் உடம்புகளுமே பேரறிவையும் பேரின்பத்தையும் அளிக்குமென அமைத்தானல்லன். ஆதலாற், சிற்றறிவு சிற்றின்பங்களைத் தரும் இவற்றிற் பற்று வையாமற், பேரறிவு பேரின்பங்களைத் தருங் கடவுளிடத்தில் நாம் பற்றுவைத்தல் வேண்டுமென்பதே அவனது அரும்பெருநோக்கமாதலால், அந்நோக்கத்தையுணர்ந்தவர்களல்லாமல் மற்றையோர் இவ்வுலகப் பற்றை விடார். ஆகவே, இறைவனைச் சார்ந்து வணங்கி அவன்றன் பேரின்பத்தை நாம் பெறுவது அவனது நோக்கத்தோடு ஒத்திருத்தலால், அதுகண்டு இறைவன் திருவுளம் மகிழ்வன். மகன் உயர்ந்த நிலையடைதல் கண்டு மகிழாத தந்தை தாயரும் உளரோ ? எனவே, நாம் இறைவனை வணங்குவது நமக்குப் பெரும்பயன் தருதலோடு, இறைவற்கும் மகிழ்ச்சி தருவதாகலின், அவற்குத் திருக்கோயில்களும் திருவிழாக்களும் அமைத்து வணங்குதலே சிறந்த முறையாமென்க. இஃது உணர்த்துதற்கே அப்பரும்,

"குறிகளும் அடையாளமுங் கோயிலும்
நெறிகளும் அவன் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதினும்
பொறியிலீர் மனம் என்கொல் புகாததே"

என்று அருளிச் செய்தா ரென்பது.

# கால இயல்

## பகுதி - 2

[உதவிப் பத்திராசிரியர்]

'பூமலி கற்பகப் புத்தேள் வைப்பும்
நாமநீர் வரைப்பின் நானில வளாகமும்
ஏனைப் புவனமும் எண்ணீங்குயிரும்'

எல்லாம் தன்னாணை வழி நிற்ப, வினைவரம்பறுத்துத் தனி யரசுய்க்கும் இக்காலமென்று கருதப்படும் பொருள் ஞாயிறு, திங்கள், உடுக்கள் என்னும் இயற்கைப் பொருள்கள், கன்னல், கடிகாரம் என்னும் செயற்கைக் கருவிகள் ஆகிய இவற்றது இயக்கத்தின் வைத்து அளந்தறியப் படுவதொன்றாய் வழங்கப் பட்டு வருவதன்றி, இவ்வியக்கத்தின் வேறாய் அஃதியாண்டும் எவரானும் காணப்பட்டதின்று. நெருநல், இன்று, நாளை என்பன எல்லாம் ஞாயிறு தோன்றி மறைந்த காலப் பகுதியும், அஃதின்னே எழுந்தியங்கும் நாளின் பகுதியும், அது பின்னும் மறைந்தெழுந்தியங்கப்போம் பொழுதின் பகுதியும் ஆவதன்றி, இவற்றின் வேறு காணப்பட்ட நாளொன்று மின்றா மென்பது யாரும் நன்கறிந்த தொன்றாம். இதனை நுணுகி நோக்குங்கால், ஒரு பொருள் தன்னிலையி னீங்கிப் பிறிதோரிடத்தினைத் தலைப்படுதலாகிய வினை நிகழ்ச்சியாம் புடைபெயர்ச்சியே இயக்கமெனவும் அவ்வியக்கத்தின் ஒன்றுபட்ட தொடர்பே காலமெனவும் கருதப்படுவதாமென்பது நன்கு புலனாம்.

இவ்வாற்றான், இயற்கைப் பொருள்களின் புடை பெயர்ச்சியாகிய இயக்கத்தானே காலமென்பது கணிக்கப்படுதலின், அவ்வியற்கைப் பொருள்களின்கட் காணப்பட்ட இயக்க நிலை யாண்டு நின்றும் போந்ததாமெனச் சிறிது ஆழ்ந்து நோக்குதல் வேண்டும். அங்ஙனம் நோக்குங்கால், இவ்வுலகமும், இதனுட்பட்ட பல பொருள்களும் இயங்கிக்கொண்டே இருப்பக் காண்கின்றேம். இவ்வாறு இவ்வியக்க நிலைகளெல்லாவற்றையும் நோக்கிக்கொண்டே செல்லச் செல்ல, இறுதியில் கால உரிமை எய்தி நிற்கும், ஞாயிற்று மண்டிலம், தொடங்கித் திங்கள் மண்டிலம், செவ்வாய் மண்டிலம், புதன் மண்டிலம், வியாழ மண்டிலம், வெள்ளி மண்டிலம், சனி மண்டிலம் என்னும் எல்லா மண்டிலங்களும், இந்நில மண்டிலமும் மற்றும் கடற்கரையின் நொய்ம்மணலை எண்ணி அளவிடினும் அளவிடப்படாத உடுக் கூட்டங்களுமாகிய இன்னோரன்ன வெல்லாம் பூதாகாய வியாபக அந்தரத்திலே அம்மனைகள் சுழன்றாற் போன்று, சுழன்று சுழன்று இயங்கிக் கொண்டே இருத்தல் புலனாகின்றது. இங்ஙனம் இவைகள் எல்லாவற்றினும் இவ்வியக்கமென்பது காணக்கிடத்தலின் இஃது இவ்வெல்லாப் பொருள்களுக்கும் மூலக் காரணமாய், இவ்வெல்லாப் புவன போகங்கட்கும், முதற் பொருளாய், இக் காணப்பட்ட எல்லாவற்றிற்கும் கருப்பொருளாய் உள்ள ஒன்றின் இயக்கமே யாதல் வேண்டும் என்பது பெறக் கிடக்கின்றது. அங்ஙனம் இக் காணப்பட்ட எல்லாவற்றிற்கும் முதற் காரணமாய் நின்று நிலவுவது யாதென ஆராய்தற்குக் காட்சியளவை பயப்பாடின்றா மாதலின், ஈண்டிதனை ஆராய்தற்கு உறு துணை

வேண்டும் பொருள்களின் துணையும் வேண்டியவர்களா யிருக்கின்றனர். வியப்பான இந்த உடம்பையும் இந்த உலகத்தையும் இந்த உலகத்துப் பொருள்களையும் மக்கள் தாமாகவே உண்டாக்கிக் கொள்ள வல்லவர்களாய் இல்லை. ஆகவே, இத்தனை வியப்பான பண்டங்களையுந் தமக்கு ஆக்கிக் கொடுக்கத் தக்க பெருவல்லமையும் பேரறிவும் பேரிரக்கமும் உள்ள ஒரு முழுமுதற் கடவுள் கட்டாயம் இருக்க வேண்டுமென்னும் உணர்ச்சி எல்லார் உள்ளங்களிலும் இயற்கையாகவே தோன்றா நிற்கின்றது.

இனி, எவராலும் படைக்க முடியாத இத்தனை உடம்புகளையும் இத்தனை உலகங்களையும் இத்தனை அரும்பொருள்களையுந் தமக்குப் படைத்துக் கொடுத்த எல்லாம் வல்ல இறைவன் ஒருவன் உண்டு என்னும் உணர்ச்சி வந்தவுடனே, அவனைக் காணுதற்குங் கண்டு வணங்குதற்கும் எல்லாருக்கும் பேரவா உண்டாதலும் இயல்பேயாம். சலவைக் கல்லில் திருத்திச் சமைக்கப்பட்ட மிக அழகான ஓர் உருவத்தையேனும், பலவண்ணங்களாற் குழைத்துத் திறமாக எழுதப்பட்ட ஓர் ஓவியத்தையேனும், வானத்திற் பறக்கும் ஒரு மயிற்பொறியையேனுஞ், சுவைத்த சொல்லும் பழுத்த பொருளும் நிறைந்த ஒரு நூலையேனும் இயற்றிய கைத்தொழிலாளரும் நல்லிசைப் புலவருந் தமது காலத்தில் உயிரோடிருக்கின்றனர் என்று தெரிந்தால் அவர்களைக் காண்டற்குங் கண்டு வணங்குதற்கும் மக்கள் எவ்வளவு விழைவுடையராய் விரைந்து செல்கின்றனர்! சென்று, அவர்களை மனம் உருகி வணங்கி வாழ்த்தி எவ்வளவு [illegible] சிற்றறி வ[illegible]லேயே சிறிது சிறந்த அறிவு வாய்த்த கைத்தொழிலாளரையும் நல்லிசைப் புலவரையும் அவர் அமைக்கும் உருவ அமைப்பு நூல் அமைப்பின் அழகால் மனம் இழுக்கப்பட்ட மக்கள் தேடிச்சென்று கண்டு வணங்கப் பேராவல் கொள்வார்களானால், எவராலும் அமைக்க முடியாத எண்ணிறந்த உடம்புகளையும் எண்ணிறந்த உலகங்களையும் எல்லையற்ற உலகத்துப் பொருள்களையும் நாம் கேளாமலே அமைத்துக் கொடுத்து, மற்றைத் தொழிலாளரும் புலவரும் அழிந்தொழிவது போல் அழிந்தொழியாமல், எக்காலத்தும் எவ்விடத்தும் நம்மோடு உடனிருக்கும் எல்லாம் வல்ல பெருமானைக் காண்பதற்குங் கண்டு வணங்குதற்கும் மக்களாகிய நாம் இன்னும் எவ்வளவு மிகுந்த பேராவல் உடையவர்களாய் இருக்க வேண்டும். மக்களிற் சிறந்தாராயுள்ள சிலரைக் கண்டு வணங்குதலாலேயே, நம்மனோர்க்கு அத்தனை யன்பும் இன்பமும் உண்டாகுமானால், எல்லாச் சிறப்புக்குந் தலைவனாய் நிற்கும் இறைவனைக் கண்டு வணங்குதலால் நமக்கு இன்னும் எவ்வளவு மிகுதியான அன்பும் இன்பமும் உண்டாகல் வேண்டும்!

கடவுள் தன்னை மக்கள் வணங்கல் வேண்டுமெனத் தன் திருவுள்ளத்திற் கருதுவது, அதனால் தனக்கு ஒரு பெருமை தேடிக்கொள்ளுதற்கு அன்று. ஒருவன் பிறனொருவனை வணங்குவது அச்சத்தினாலும் நிகழும்; அன்பினாலும் நிகழும். செல்வத்தினாலேனுங் கல்வியினாலேனுந் தலைமையினாலேனும் வலிமையினாலேனும் சிறந்தானாயிருக்கும் ஒருவனைச் செல்வமுங் கல்வியுந் தலைமையும் வலிமையும் இல்லாத பிறர் பெரும்பாலும் அச்சத்தால் வணங்கா நிற்பர்; சிறுபான்மை

187122



வணங்கா நிற்பர். மேற்சொன்ன வளங்களுடையோன் தன்னையே பெரியனாக மதித்துத் தன்னை வணங்குவோரை மதியாது ஒழுகும் வரையில், அவனை வணங்குவோர் அவன்பால் என்றும் அச்சமே கொண்டு நிற்பர். அங்ஙனஞ் செல்வம் முதலிய வளங்களால் உயர்ந்தோன் தன்னை மேலாகக் கருதாது, தன்னை வணங்குவாரெல்லாரிடத்தும் அன்பும் இரக்கமும் உடையனாய் ஒழுகுவனாயின், அவனை வணங்குவார் தமக்குள்ள அச்சந் தீர்ந்து அவன்பாற் பேரன்புடையராய் உளங்குழைந்து உருகியொழுகுதலையுங் காண்கின்றோம். இவ்வியல்பை உற்று நோக்குங்காற், கடவுளை அச்சத்தால் வணங்குவோர் நிலைக்கும், அன்பினால் வணங்குவோர் நிலைக்கும் உள்ள வேறுபாடு நன்கு விளங்கா நிற்கும். "கடவுள் ஒப்புயர்வு அற்ற செல்வமும் அறிவுந் தலைமையும் வலிமையும் உடையர். அவரை வணங்காது ஒழியின் நமக்குத் தீங்குண்டாம்" என்னும் அளவே கருதி, அவரை அச்சத்தால் வணங்குவோர் தாழ்ந்த நிலையினராவர். "மேற்குறித்த வளங்களை யுடையனாதலுடன், எம்பெருமான் ஒன்றுக்கும் பற்றாத எளியேங்களிடத்து அளவிறந்த அன்பும் இரக்கமும் உடையன்" என்று கருதி அவனை அன்பினால் வணங்குவோர் உயர்ந்த நிலையினராவர். அன்பினால் வணங்கும் உயர்ந்த நிலையினரே கடவுளின் உண்மையை உணர்ந்தாராவர். ஏனென்றாற், கடவுள் எல்லையற்ற செல்வமும் அறிவுந் தலைமையும் வலிமையும் மட்டுமே யுடையரல்லர்; அறியாமையுந் துன்பமும் உடைய எல்லா உயிர்களுக்கும் அவ்விரண்டையும் நீக்கி, அறிவும் இன்பமுந் தருதற்கு அவர் செய்திருக்கும் ஏற்பாடுகளின் அருமையை எண்ணிப் பார்க்கப் பார்க்க அவர் எல்லா உயிர்களிடத்தும் எல்லையற்ற அன்பும் இரக்கமும் உடையரென்பது தெளிவாக விளங்குகின்றது. நம் உடம்பிலுள்ள உறுப்புக்களிற் கண்ணினுஞ் சிறந்தது பிறிதில்லை; கண் இல்லையானால் நமது அறிவு முக்காற் பங்குக்குமேல் விளங்காது ஒழியும். இத்துணைச்சிறந்த கண்ணையும், இதற்கு அடுத்த சிறப்பிலுள்ள ஏனை உறுப்புக்களையுந் தாமாகவே படைத்துக் கொள்ள வல்லவர்கள் எங்கேனும் உளரோ? இல்லையன்றே! எவராலும் படைக்க முடியாத இவ்வரும் பெறல் உறுப்புக்களை, நாம் கேளாதிருக்கையிலும் நமக்குப் படைத்துக் கொடுத்தவன் நம்பால் எவ்வளவு அன்பும் எவ்வளவு இரக்கமும் உடையனாயிருக்க வேண்டும்! இதுபற்றியன்றோ மேனாட்டிற்சிறந்த மெய்ந்நூலாசிரியரான ஒருவர் (Bergson) கண்ணின் வியப்பான அமைப்பை ஆராய்ந்து காட்டிக் கடவுளின் அறிவாற்றலையும் அருளையும் நிலைநாட்டினர். ஆகவே, கடவுள் வகுத்த இவ்வியற்கை யமைப்பின் திறங்களை ஆராயுந்தோறும் ஆராயுந்தோறும் நாம் அவன்றன் ஆற்றலையும் அருளையும் அறிந்தறிந்து மெய்யறிவு விளங்கப் பெறுகின்றோம் அல்லமோ? பேரறிவுடையோன் ஒருவன் வகுத்த ஒரு நீராவிவண்டியின் அமைப்பையேனும், அல்லது அது போன்ற மற்றொரு வியத்தகு பொறியையேனும் நாம் ஆராய்ந்து நோக்குந்தோறும், அவனது அறிவின்திறம் நமக்குப் பெரியதோர் இன்பத்தை விளைத்து நமதறிவையும் [illegible]செய்து விளக்குதல் போல, [illegible]றைவன் படைத்த படைப்

யாக இலங்குவது, இவையும் இவை போன்ற பிறவு மெல்லாம் தம்மலைகியகன்ற பேரறிவான் அளந்தறிந்துரைக்கும் தெய்வப் புலமை கைவரப்பெற்ற செம்புலச் செல்வர்கள் இயற்றி யளித்த திருவருள் நூல்களேயாம்.

இத்துணைகொண்டு நோக்குங்கால், இக்காணப்பட்ட உலகங்கள் அனைத்திற்கும் வித்தாய் விளங்குவது, என்றும், காரண காரிய மயமாக இலங்கும், மாயா தத்துவமாம். இம்மாயை எனப்படு பொருளே இவ்வண்டங்களையும், இவ்வண்டங்களுட்பட்ட உயிர்களையும், ஏனைப்பிறவற்றையும் எல்லாம் இறைவனது வரம்பிலாற்றல் வழிநின் றியக்கும் முதற் பொருளாமென எல்லா ஞான நூற்களாலும் எடுத்தோதப்படுகின்றது.

‘ நித்தமா யருவா யேக நிலையதா
யுலகத் திற்கோர்
வித்துமா யசித்தா யெங்கும் வியாபியாய்
விமல னுக்கோர்
சத்தியாய்ப் புவன போகந் தனுக
ரணமு முயிர்க்காய்
வைத்ததோர் மலமாய் மாயை மயக்கமும்
செய்யு மன்றே’

என இதனைச் சிவஞான சித்தியார் என்னும் ஞானப்பனுவல் நன்கெடுத்து விளக்குதல் காண்க.

இதனான், இம்மாயை எனப்படு பொருளே, தனுகரண புவனபோகங்களென விரிந்து விளங்கும் இவ்வுலகிற்கு முதற் காரணமா மென்பது காணக் கிடக்கின்றது.

இனி மண், புனல், அனல், கால் முதலியவாக காணப்பட்ட இவ்வுலகம் மெய்ப் பொருளுமன்றிப் பொய்ப் பொருளுமன்றி அநிருவசனமாய் நிற்கும் மாயையிற் கடவுட் பொருளின் விவர்த்தனமா யெழுந்த பொய்த்தோற்றமே யாதலின், இக்காணப்பட்ட எல்லாம் அக்கடவுட் பொருளாகிய சித்தின் விவர்த்தனமே எனக் கூறி மயங்க வைப்பாரு முளர்.

இல்லதற்குத் தோற்ற மின்மையானும், உள்ளதற்குச் செய்வோரின்றிச் செய்வினை இன்மையானும், பலவாய்ச் சடமாய் அவயவப் பகுப்புடையதாய்ச் சுட்டி யுணரப்படுவதாய்த் தோற்றம், நிலை, இறுதி என்னும் முத்தொழிலும் ஒரு சேர நிகழும் வித்தக முடையதாய்க் காணப்படுதலின், இவ்வுலகம் ஒருவனால் உண்டாக்கப்பட்ட உள் பொருளே யாமென்பது சற்காரிய வாதத்தின் சத்திய முடிபாம். இது காட்சி முதலிய எல்லா அளவைகளாலும் உண்மை என்று துணியப்படுதலாலும், மெய்ப் பொருளு மன்றிப் பொய்ப் பொருளு மன்றி நிற்ப தொன்றுண்டென்று எடுத்துக் காட்டுதற்கு எப்பொருளு மின்மையானும் மாயை அநிரு வசனமென்பது எச்சமயத்தார்க்கும் கொள்கை அன்மையானும் அது பொருந்துவ தன்றாம்.

அவ்வக்காரணங்களின் குணமெல்லாம் அவ்வக்காரியங்கட்கும் உளவென்பது நியமமாதலின், சித்தாகிய கடவுட் பொருளினின்றும் எழுந்த உலகம் சித்தாதல் வேண்டுமன்றிச் சடமாதல் செல்லாது, என்னை? பொன்னானியன்ற பணிகளனைத்தும் பொன்னே யாதல் காண்டு மன்றிப் பிறிதாதல் கண்டில மாகலா னென்பது. உலகமோ அவ்வாறிருப்பக் காண்கிலேம். இறைவனோ இன்ப நிலையமாக உள்ளவன், உலகமோ துன்ப நிலைக்களமாக உள்ளது. இறைவனோ அறிவுமயமாக உள்ளவன், உலகமோ அறியாமை வயமாக உள்ளது.



இறைவனோ சித்துப் பொருள், உலகமோ சடப் பொருள். சித்தினின்று சடமும், சடத்தினின்றும் சித்தும் ஒருகாலும் தோன்ற மாட்டா. சிலந்தியினின்றும் நூல் தோன்றக் காண்டுமெனின்? அது சிலந்தியின் உடற்கண்ணின்றுந் தோன்றுவ தன்றி உயிர்க்கண்ணின்றும் தோன்றுவ தன்று. சாணத்தினின்றும் தேள் தோன்றக் காண்டுமெனின்? அங்ஙனம் தோன்றக் கண்டது தேளின் உடலே யன்றி உயிரன்று. இன்னோரன்ன வெல்லாம் பிறவிப் பேதமாமாறு நுனித்தறிந்து கொள்ளல் வேண்டும். அந்நியம மின்றாயின் ‘நெல் கமுகாய் நீளாது நெல்லாய் நீளுதற்கு ஏது என்னை’ என்னும் தருக்கம் நிலைபெறுவ தன்றாம்.

அற்றேல், பாலில் உண்டாகிய தயிருக்குப் பாலின் குணமும், நெல்லில் உண்டாகிய பதர் பலாலங்கட்கு நெல்லின் குணமும், கொம்பில் உண்டாகிய புல்லுக்குக் கொம்பின் குணமும் காணாமையின், காரணத்தின் குணமே காரியத்திற்குமா மென்னும் நியமம் பொருந்தாதா லெனின், அற்றன்று. ஒன்றன் குணம் ஒன்றற் காதல் இன்மையின் காரணத்தின் குணமே காரியத்திற்குமா மென்றதன் கருத்து, காரணத்தின் குணங்களோடு ஒத்த குணங்களே காரியத்திற்கும் உளவாதல் அன்றி அவற்றிற்கு மறுதலையான குணங்கள் உளவாகா என்பதே யாமாகலான், எடுத்துக் காட்டிய நியமத்திற் கிழுக்கின்மை காண்க. இவ்வுண்மை யறியாதுரைப்பன எல்லாம் வெறும் போலியேயா மென்பது.

இன்னும் அக்கடவுட் பொருளே இவ்வுலகாம் எனக் கருதுவார்க்கு, அப்பொருள் ‘நிருவிகாரி’ என்பதும் செல்லு மாறின்றாம். அற்றேல், ‘தோற்றுவித் தளித்துப் பின்னும் துடைத்தருள் தொழில்கள் மூன்றும்’ ஆற்றுவானிறைவன் என்னும் நும்மதம் பற்றி அவன் துடக்குற்று விகாரமெய்தானோவெனின்? எய்தானாமென்பது. என்னை? ‘ஞாலமேழினையுந் தந்து நிறுத்திப் பின்னாசம் பண்ணும்’ இக்காலம், அவற்றைக் காரியப்படுத்துங்கால் எல்லாப் பொருட்கும் தானாதாரமாய், தனக்கோ ராதாரமின்றி நின்று, இறப்பு, நிகழ்வு, எதிர்வு எனப் பல் வேறுவகைப்பட்டு எல்லாத் தொழிலும் செய்தும் தான் விகாரமின்றி நிற்றல் போல, அமலனாகிய அவ்விறைவனும் தனது சத்திசங்கற்ப மாத்திரையானே இவ்வுலகினைப் படைத்தளித் தழித்து அருள் புரிகின்றானாகலா னென்பது.*

இதனையோ ருதாரணத்தின் கண் வைத்து விளக்கிக் காட்டுதும். நாம் கற்கு நூற்களின் கண்ணுள்ள ‘துறக்கம்’ ‘நிரயம்’ என்றாற் போலும் சொற்களும், அவற்றின் பொருள்களும், புத்தி தத்துவம் பற்றுக் கோடாக நம் ஆன்ம போதத்தின்கண் ஒடுங்கித் தோன்றும் வழி அவ்வாற்றான் நம்மறிவு அத்துறக்க நிரய இன்ப துன்பங்களை நுகருமாறின்று. அவ்வண்ணமே ‘கடுங்கண் யானையும் தமுகட்பன்றியும்’ கனவின்கட் கண்ட ஒருவன் நனவின்கண் அதனை உணர வருங்கால், அதனான்

---

* தோற்றுவித் தளித்துப் பின்னுந் துடைத்தருள் தொழில்கள் மூன்றும் போற்றவே யுடைய னீசன்புகுந்தது விகாரமென்னிற், சாற்றிய கதிரோன் நிற்கத் தாமரை யலருங் காந்தம், காற்றிடுங் கனலை நீருங் கரந்திடுங் காசி னிக்கே.

என்பது சிவஞான சித்தியார்.

அஞ்சி வருந்துத லின்று. எனினும் சொப்பனவத்தைக்கண் தொழிற்படுவதாகிய சூக்கும தேகத்திற்கு அது அனுபவ மாகின்றமையான் கனவு நிலைக்கண்ணே அஞ்சி வருந்துத லுண்டு. கனவினும் கண் முதலிய கரணங்கள் சூக்குமத்தி னுண்டென்பது ஞான சாத்திரம் வல்லார் வாய்க்கேட்டுணர்க. நனவு நிலைக்கண் கனவை நினைத்தல் சங்கற்பம் ஆகலான், மனம் அப்பொருட்கண் தாழ்ந்து நின்று துடக்குற்றுத் துன்புறுதல் இல்லை. கண் முதலிய கரணங்களாற் காண்பதற்கும் உள்ளத்தாற் காண்பதற்கும் வேற்றுமை பெரிதாம். அங்ஙனமே, சங்கற்ப மாத்திரையாற் செய்வதூஉம், கரணத்தாற் செய்வதூஉம் என வினைமுதல் இருவகைப்படும். 'இஃதிவ்வாறுக' என்றெண்ணுதலாகிய சங்கற்ப மாத்திரையாற் செய்யு முதல் வற்குக் கருவி கரணங்களா னன்றிச் செய்ய மாட்டாத குயவன் முதலியோர் வினை முதலாதற் பொதுமை பற்றி ஒருபுடை யுவமையாத லின்றி, முற்றுவமை யாதல் செல்லாது. அதனான், ' இஃதிவ்வாறுக' என்றெண்ணுதலாகிய சங்கற்பத்தானே எல்லாம் செய வல்ல முழுமுதற் செழும்பொருளாகிய இறைவன் இத்தொழிலான் விகார முறுவா னல்லன் என்பது தெள்ளிதாதல் கண்டு கொள்க. இதனை ஆசிரியர் மெய்கண்ட தேவர் தமது அரும்பெறன் ஞான முழு மணிக்களஞ்சியமாக இலங்கும் சிவஞான போதமென்னும் செந்தமிழ்ச் சைவஞான நூற்கண்;

'நோக்காது நோக்கி
நொடித்தன்றே காலத்திற்
றாக்காது நின்றுளத்திற்
றண்டிறைவன்—ஆக்காதே
கண்ட நனவுணர்விற்
கண்டகன வுணரக்
கண்டவனி லிற்றின்றாங்
கட்டு '

எனத் தமது அருட்பெருக்கால் அழகுற எடுத்து மொழிதல் காண்க.

அற்றேல், 'எல்லா வுலகமு மானாய் நீயே' என்றற் றொடக்கத்து மறை மொழிகளெல்லாம் பொருட் பேறில வாம் போலுமெனின்? அன்று, அவ்வருண் மொழிகளெல்லாம் இறைவன், மாயைக்குத் தானாதாரமாய், வேற்றுமையின்றி யுடன் கலந்து நின்று உலகைக் காரியப்படுத்தல் நோக்கி எழுந்தவாகலான் என்பது. இது கிழங்கினின்றும் தோன்றுந் தாமரையைச் சேற்றினின்றுந் தோன்றுவ தென்னும் பொருள்பட வைத்துப் பங்கயம் என்றழைப்பது போல்வதோர் உபசார வழக்காம். தாமரை கிழங்கினின்றும் தோன்றுவதெனினும் சேற்றினையின்றித் தோன்றாது. அங்ஙனமே உலகம் மாயையினின்றும் தோன்றுவதெனினும் இறைவன் தனது சத்தி சங்கற்பத்தினையைன்றித் தோன்றாது. இறைவன் இங்ஙனம் மாயையின் உடன் விரவி 'உலகெலாமாகி வேறாய் உடனுமாய்' நிற்றல் நோக்கியே 'இருநிலனாய்த் தீயாகி நீருமாகி' என்றற் றொடக்கத்துத் தமிழ்மறை வாக்கியங்களும்,

"அறிவானுந் தானே யறிவிப்பான் றானே
அறிவா யறிகின்றான் றானே—அறிகின்ற
மெய்ப் பொருளுந்தானே விரி பொழில்பார் [ஆகாயம்
அப்பொருளுந் தானே அவன்."

என்னும் அம்மை திருவாக்கும் எழுந்ததா மென்பது.



விரிகதிர் ஞாயிறல்லர் மதியல்லர்
வேதவிதியல்லர் விண்ணுநிலனும்
திரிதரு வாயுவல்லர் செறுதீயுமல்லர்
தெளிநீருமல்லர் தெரியில்
அரிதரு கண்ணியாளை யொருபாகமாக
அருள்காரணத்தில் வருவார்
எரியர வாரமார்பர் இமையாருமல்லர்
இமைப்பாருமல்லர் இவரே.

என்றும்,

மண்ணல்லை விண்ணல்லை வலயமல்லை
மலையல்லை கடலல்லை வாயுவல்லை
எண்ணல்லை எழுத்தல்லை எரியுமல்லை
இரவல்லை பகலல்லை யாவுமல்லை
பெண்ணல்லை ஆணல்லை பேடுமல்லை
பிறிதல்லை யானாயும் பெரியாய்நீயே
உண்ணல்லை நல்லார்க்குத் தீயையல்லை
உணர்வரிய ஒற்றியூர் உடையகோவே.

என்றும்,

போந்த தாண்டகச் சதுராது திருவாக்குகள், இறைவன், இக்காணப்பட்ட சேதனா சேதனப் பிரபஞ்சங்களுள் ஒன்றாவான் செல்லுமா றின்று என்பதனை இனி தெடுத்து விளக்குதல் காண்க.

" நிலம்நீர் நெருப்புயர் நீள்விசும்பு
நிலாப் பகலோன்
புலனாய மைந்தனொடு எண்வகையாய்ப்
புணர்ந்து நின்றான்
உலகே ழெனத்திசை பத்தெனத்
தானொரு வனுமே
பல வாகி நின்றவா
தோணோக்க மாடாமோ "

என்ற மணிவாசகனாரது திருவாசகம், இறைவன் இக்காணப்பட்ட சேதனா சேதனப் பிரபஞ்சப் பொருள்களன்று என்பதனையும், மற்றவன் இவற்றொடு வேற்றுமை யின்றி விரவி நிற்பதனையும் நன்கெடுத்துக் காட்டுதல் காண்க. இங்கே 'புணர்ந்து நின்றான்' என்னும் வாசகம் அப்பொருளை மெய்ப்பொருளாக்கல் கவனிக்கற்பாலது. 'ஒன்று நீ அல்லை அன்றி ஒன்றில்லை' என்றெழுந்த வாசகமும் இப்பொருட்டாதல் கண்டு கொள்க.



இக்கூறியவாற்றான் உலகிற்கு முதற் காரணமாக உள்ளது மாயையே என்பதூஉம், 'நிலங் குளிர்ந்த வழி அதன் கட் கிடந்தன்றி வித்து முளையைத் தோற்றுதவாறு போல்' அம்மாயை, தனக்காதாரமாய் நின்று தோற்றுவிக்கும் இறைவனது சத்தி சங்கற்பத்தானே தொழிற்பட வல்லதா மென்பதூஉம், அக்காரணத்தானே மாயா காரியமாய இவ்வுலகம் இறைவன்பால் நின்றெழுந்ததாமென உபசார வழக்கான் ஓதப்பட்டதா மென்பதூஉம் நிலைநிறுத்தப் பட்டமையான், இக்காலங் காட்டும் இயக்கமனைத்தும் அம்மாயையின் தொழிற்பாடே என்பது துணிபொருளாதல் காண்க.

இங்ஙனம் இக்காலமென்பது மாயையினின்றுந் தோற்றமுற் றெழுந்து, அம்மாயையின் இயக்கத்தே அவ்வவ்விடங்களான் வரையறுக்கப்பட்ட ஏகதேசம் பொருள்களின் நிகழ்ச்சிகட் கேற்ப, முத்திறப்பட்டுத், தனக்குக் கீழுள்ள காரியப் பிரபஞ்ச மனைத்தையும் கால வரை யறையிற் படுத்தி கன்மத்தை வரைசெய்து நிற்கும் என்பதனையே,

மாயையிற் காலமோடு நியதிபின்
கலாதி தோன்றும்
ஆயவக்கால மூன்றா யாக்கியு
மளித்தும் போக்கிக்
காயமோ டுலகுக்கெல்லாம் கால
சங்கையினைப் பண்ணி
நாயக னாணையாலே நடத்திடுஞ்
சகத்தை யெல்லாம்.

எனப் போந்த சைவசித்தாந்த தெய்வ நூல் எடுத்து விளக்குவதாயிற்று.

# நம்பியாரூரர் தேவாரம்

[E. N. தணிகாசல முதலியார், B. A-, B. L.]

(144-ஆம் பக்கத் தொடர்ச்சி)

நம்பியாரூரர் இத்தகைய விருத்தத்தை இந்தளப் பண்ணுல் பாடினர். *7 - ம் திருமுறை 8 - வது திருப்பதிகத்தை நோக்குக. ஆயினும், இவற்றில், சுந்தரர் பதிகங்கள் அறுசீர்க்கழிநெடிலடியாசிரியங்களல்ல. திருநாவுக்கரசு நாயஞர் பதிகங்களில் பொருள் நோக்கைக் கவனிக்கு மிடத்தும் 2-வது சீருக்கும் 3-வது சீருக்கும் இடையே ஒலி நிற்பதைக் காணலாம்.

*இப்பதிகத்தில் அறுசீராய்ப் பாடுவதற்கும் நாற் சீராய்ப் பாடுவதற்கும் உள்ளபேதம் காண்க.

மணமென மகிழ்வர் முன்னே
  மக்கடாய் தந்தை சுற்றம்
பிணமெனச் சுடுவர் பேர்த்தே
  பிறவியை வேண்டே ஞயேன்
பணையிடைச் சோலை தோறும்
  பைம்பொழில் விளாகத் தெங்க
ளணைவினைக் கொடுக்கு மாரூ
  ரப்பனே யஞ்சி னேனே.

—திருவாரூர் - பண் - இந்தளம் 6.

இப்பண்ணில் அலகிடுதல் 2, 3 சீர்களிடையிலும் 5, 6 சீர்களிடையிலும் ஓசையில் சந்திடாது வாசித்த லாகும் :—

மணமென மகிழ்வ(ர்)முன்னே
  மக்கடாய் தந்தைசுற்றம்
பிணமெனச் சுடுவ(ர்)பின்னே
  பிறவியை வேண்டேஞயேன்
பணையிடைச் சோலைதோறும்
  பைம்பொழில் விளாகத்தெங்க
[illegible]கொடுக்குமாரூர்
  அப்பனே [illegible]

இவ்வாறு விளச்சீர் [illegible]காய்ச்சீராய் வருவதே இப்பதிகத்தில் [illegible]ொருளுக்கும் இசைக்கும் முரணாகாது நிற்கும்.

சுந்தரர் பதிகத்திலோ அங்ஙனம் இரண்டாஞ் சீர் மூன்றாஞ் சீர் இடையே சந்தின்றி ஒலியோடுவதே, பொருளுக்குப் பொருத்தமாவதைக் காண்க. ஆகையால், சுந்தரர் பதிகம் விளச்சீர் - விளங்காய்ச்சீர் மாறிமாறி வரும் நாற்சீர் விருத்தமாய்ப் பாடினு லன்றி அதன் இசையும் பொருளும் நன்கு விளங்கா.

இத் திருமுறையில் 9-ம் திருப்பதிகமான அரிசிற்கரைப் புத்தூர்ப் பதிகமும், 10-ம் பதிகமான திருக்கச்சியனேகதங்காவத விருத்தங்களும் முறையே புளிமா* வடுக்குகளாலும் கூவிள வடுக்குகளாலும் பெரும்பாலும்† அமைந்து இசைப் பேதங் காட்டுவதுடன் புளிமாக் கூட்டமே, கூவிளக் கூட்ட

* கடிக்கும் மாவால் மலையா லமரர்
  கடலைக் கடைய வெழுகா ளகூட
மொடிக்கும் முலகங் களையென் றதனை
  யுமக்கே யமுதா கவுண்டீ ருமிழீ
ரிடிக்கும் மழைவீழ்த் திழுதிட் டருவி
  யிருபா லுமோடி யிரைக்கும் திரைக்கை
யடிக்கும் புனல்சே ரரிசிற் றெ(ன்)கரை
  யழகார் திருப்புத் தூரழ கனீரே.

[இப்பாசுரத்தைச் சம்பந்தர் "சடையாயெனுமால்" என்னும் திருமருகல் திருப்பதிகத்துடன் பாடினுல் இதன் யாப்பின் நயம் விளங்கும். மேற்கண்ட ணகரமெய் இசையில் மாத்திரையாதும் பெருதிருத்தலும் "தூ" என்னும் நெடில், குறிலளவாயொலித்தலும் காண்க.]

† வன்றொண்டர் இசையில் இலயப்பட்டுப் பாடினமையால் சிற்சில விடங்களில் சீர்கள் பேதிக்கின்றன. ஆயினும் வேறு விதமாய் யாப்பு அமையக் கூடுமோவெனப் புலவர் ஆராய்வாராக.



மென விசையிலியல்வதையும் வற்புறுத்தும்.

10-ம் திருப்பதிகத்தில் 3-ம் பாசுரம்* ஒன்றே, முதற்சீரில் புளிமா பெற்றும், ஏனைய சீர்கள் கூவிளமாயும் வரும். முதற் † பாசுரமுதற்சீர் தேமாங்காயாகவும் வருவதால், நம்பியாரூரர் இசையில் புளிமா, கூவிளம், தேமாங்காய் யாதொரு பேதமு மின்றி ஒன்றிற்கொன்று வருவதையும் கவனிக்க. இப்பதிகத்தில் ஒவ்வொரு அடியி னிறுதியிலும், ஆலாபனைக்குப் பொருந்தவும், சற்றுப் பாடகன் மூச்சு வாங்கப் பொழுது தந்தது போலும், ‡ ஒரு நெடிலசை நிகழ்வதையும் நோக்குக.

இப்பண்ணிற் பாடிய 11-ம், 12-ம் திருப்பதிகங்களைச் சற்று ஆராய்வோம். 11-ம், திருப்பதிகமாகிய திருப்பூவணம் - பண் - இந்தளமென்பதில் நமக்குக் கிடைத்த பாசுரங்கள் எட்டே. இரண்டு பாசுரங்கள் வான்மீகத்திற்கு இரையாயின! 11-ம் பதிகமாகிய திருநாட்டுத்தொகை - பண் - இந்தளத்தில் நாம் செய்த பாக்கியத்தால் 11 பாக்களும் உள.

11-ம் பதிகத்தில், ஒவ்வொரு அடியும் 3 கூவிளச்சீர்களுடன் இறுதியில் ஒரு தேமாவும் பெறும். 2, 3, 6, 7, 10 இப்பாக்களின் முதற்சீரும் கூவிளமே. மற்ற மூன்று பாக்களில் முதற்சீர் * கருவிளமாயிருக்கின்றன. 12-ம் பதிகத்தில் முதற்சீர் மாச்சீராயும், †பிற சீர்

* கோடிக ளிடைக்குயில் கூவுமி டம்மயி
  லாலுமி டமழு வாளுடைய
கடிகொள் புனற்சடை கொண்டநு தற்கறை
  கண்டனி டம்பிறைத் துண்டமு டிச்
செடிகொள் வினைப்பகை தீருமி டந்திரு
  வாகுமி டந்திரு மார்பக லத்
தடிக ளிடம்மழல் வண்ணனி டங்கலி
  கச்சிய னேகதங் காவத மே.

—திருக்கச்சியனேக தங்காவதம்
  பண் - இந்தளம். 3.

† தேனெய்பு ரிந்துழல் செஞ்சடை யெம்
  மானதி டந்திக ழைங்கணை யக் [பெரு
கோனையெ ரித்தெரி யாடியி டங்குல
  வானதி டங்குறை யாமறை யா
மானையி டத்ததொர் கையனி டம்மத
  மாறுப டப்பொழி யும்மலை போல்
யானையு ரித்தபி ரானதி டங்கலி
  கச்சிய னேகதங் காவத மே.

செ. 1.

‡ இக்கருத்தினுலேயே கடைச்சீர் தேமாவாய்ச் சில பதிகங்களில் நிற்பதைக்காண்க.

* நடையுடை நல்லெரு தேறுவர் நல்லார்
  கடைகடை தோறிடு மின்பலி யென்பார்
துடியிடை நன்மட வாளொடு மார்பிற்
  பொடியணி வாருறை பூவண மீதோ ?

—திருப்பூவணம் பண் - இந்தளம். 5.

† பேணி நாடத னிற்றிரி
  யும்பெரு மான்றனை
யாணை யாவடி யார்கடொ
  ழப்படு மாதியை
நாணி யூரன்வ னப்பகை
  யப்பன்வன் றொண்டன்சொல்
பாணி யாலிவை யேத்துவார்
  சேர்பர லோகமே.

—திருநாட்டுத் தொகை -
  பண் - இந்தளம் 11.

(இம்மாதிரி கலிநிலைத்துறை சம்பந்தர் பதிகங்களிலும் பலவுள.)

(உ - ம்) ஆனி லங்கிள ரைந்து
  மவிர்முடி யாடியோர்
மானி லங்கையி னன்மண
  மார்மங்க லக்குடி
யூனில் வெண்டலைக் கையுடை
  யானுயர் பாதமே
ஞான மாகநின் றேத்தவல்
  லார்வினை நாசமே.

சம்பந்தர். திருமங்கலக்குடி-
  பண் - இந்தளம். 5.

இனி, இக்கால தத்துவம் தோற்று
தற்குக் காரணமாய் இக்காணப்பட்ட
பொருள்கள் அனைத்தையும் தம் வியா
பகத்துள் அடக்கி உயிரில் பொருள்
கள் எல்லாவற்றிற்கும் முதலாய், உயி
ரின் கருவி கரணங்கட்குப் புலனாத
லின்றி, யாண்டும் ஒழிவற விரிந்து
விளங்கும் இம்மாயையின் தனுகரண
முடையார் எவரேனும் அவர் எல்லாம்
இக்கால தத்துவ ஆட்சியுட்பட்ட பர
தந்திரரே ஆவர்,

“ நூறு கோடி பிரமர்கள் நொங்கினர்
ஆறு கோடி நாராயண ரங்ஙனே
ஏறு கங்கை மணலெண்ணி லிந்திரர்
ஈறி லாதவன் ஈசனொரு வனே ”

என்னுந் தமிழ்மறை இக்கால தத்துவ
நுட்பத்தினைக் காட்ட வந்ததேயாம்.

‘ப்ண்டையிற் படைப்பும் காப்பும்
பறந்தன மாயை யோடே ’

என்றும்,

“ அல்லலாந் தொழில் படைத்தே
அடிக்கடி உருவெ டுத்தே
மல்லன்மா ஞாலங் காக்க வருபவர்
கடவுள் என்னில்
தொல்லையாம் பிறவி வேலை தொலைந்திடா
திருள்நீங் காது
நல்லது மாயை தானும் நானென
வந்து நீந்தும் ”

என்றும், போந்த சந்தாயுமானச் செல்
வர் திருவாக்குகளின் கண்ணே பொதி
ந்து கிடக்கும், இக்காலதத்துவ நுட்ப
ஆழ்ங் கருத்துக்கள் நுண்ணிதின் உண
ரற்பாலனவாம்.

இங்ஙனம் ‘ஞாலமேழினையுந் தந்து
நிறுத்திப் பின் நாசம் பண்ணும்’
இக்கால தத்துவத்தின் ஆற்றலுணர்ந்து
வியந்து மயங்கினர் ஒரு சிலர், ‘காலமே
கடவுளாகக் கண்டனம்’ என்றுங் கூறு
வாராயினர், காலமென்பது சடமாக
லான், அது தானே வினை முதலாதல்
செல்லாது. மற்று அநாதி முத்த சித்
துருவாகிய சேதனனும் வினைமுதல்,
நந்தம் ‘ கருமேனி கழிக்க வந்த
கருணை ’ யாம் தனதாணையாகிய திரு
வருளால் செய்யும் அத்தொழிற்குத்
துணைக் காரணமாம். இதுவே சைவ
சித்தாந்த நூன் முடிபாம்.

“நாளென வொன்றுபோற் காட்டி யுயிரீரும்
வாள துணர்வார்ப் பெறின் ”

என ஆசிரியர் திருவள்ளுவனாரான்
எடுத்துரைக்கப்பட்ட தாகிய இக்கால
இயலின் உண்மை இலக்கண முணர்ந்
தார் ஒவ்வொருவரும், இதனோடுடன்
வைத் தெண்ணப்படுவதாகிய ஏனைத்
தத்துவங்களையும் இவ்வாற்றான் ஆய்ந்
துணர்ந்து, இத்தத்துவங்களா னாக்
கப்பட்ட ‘ ஆசை தருமுலக மெலாமல,
கைத் தோா மென்றறிந்து’ பின்
‘ கண்ட விவை யல்லேனா னென்ற
கன்று காணக்கழி பரமு நானல்லேன்
எனக் கருதி ’ நின்று, பிறவிக்கஞ்சி,
வீடு பேற்றின் அவா மிக்குடையராய்
‘ நேச மொடுந்திருவடிக் கீழ் நீங்காதே
தூங்கும் நினைவு ’ கொண்டு இறைவன்
திருவடிப் பேரானந்தப் பெருவெள்
ளப் பெருக்கில் திளைக்கும் அவாப்
பெருக்குடையராவர். இதுவே தத்துவ
ஆராய்ச்சியா னாய பயனா மென்பது.

நிர்க்குணனாய் நின்மலனாய்
நித்தியா னந்தனாய்த்
தற்பரமாய் நின்ற
தனிமுதல்வன் ; அற்புதம்போல்
ஆனவறிவா யளவிறந்து தோன்றானோ
வானேமுதல் களையின் வந்து.

எனவரும் சிவஞான போதத் திருவாக்
கின் வைத்து உய்த்துணர்ந்து கொள்க.

இதுகாறும் கூறியவாற்றான், கால
மென்பது, இவ்விவ் பாகுபாட்டான்



இவ்விவ்வாறு வகுத்து வழங்கப்படு
வதாமென்பதூஉம், அவை யனைத்தும்
பெரும்பொழுது சிறுபொழு தென்
னும் இருவகைப் பாகுபாட்டுள் அடக்
கப்படுவதா மென்பதூஉம், அவையும்,
இறப்பு, நிகழ்வு, எதிர்வு என முத்
திறப்பட்டு நிற்குமா மென்பதூஉம்,
இக்கால இயல்களனைத்தும் நன்கினி
துணர்ந்த நல்லிசைப் புலவர்கள் அவ்
வத்திணைகளின் வைத்துப் பாடிய
அழகு ததும்பும் பழந்தமிழ்ப் பாடல்
கள் அளப்பிலவா மென்பதூஉம், பல்
வேறு வகைப்பட்டு நிலவும் இக்
கால வேறுபாட்டான் இவ்வுலகமும்,
இவ்வுலகத் துட்பட்ட உயிர்களும்,
ஒவ்வொரு கணத்தும் வெவ்வேறு
நிலைகளை அடைந்து கொண்டே இருக்
கின்றவா மென்பதூஉம், நிலனொடு,
வானும் எல்லாம், இக்கால கதி
யிற் கட்டுப்பட்டே நடைபெறுகின்
றனவா மென்பதூஉம், இவ்வுலகங்க
ளனைத்தையும் ‘காத்தும் படைத்தும்
கரந்தும் விளையாடும்’ முழுமுதற்
செழும் பொருளாம் பசுபதிப் பெய
ரிய தனி முதற்கடவுள் ஒருவனே, காலா
தீதனா மென்பதூஉம், காலமென்பது
பொருளின் புடை பெயர்ச்சியானே
அளந்தறிந்து வழங்கப்பட்டு வருவதா
மென்பதூஉம், இப்புடை பெயர்ச்சி,
இயற்கைப் பொருள்க ளனைத்தினும்
காணப்படுவ தொன்றா மென்பதூஉம்,
இவ்வியற்கைப் பொருள்க ளெல்லா
வற்றிற்கும் முதற்காரணமாய் நின்று
நிலவுவது மாயா தத்துவமேயா மென்
பதூஉம், இவற்றின் மாறுபட் டுரைப்
பனவெல்லாம் அளவைகட்குப் பொருந்
துவதன்றா மென்பதூஉம், அத
னான் இயற்கைப் பொருள்களின்கட்
காணப்பட்ட இப்புடை பெயர்ச்சி
யாகிய இயக்கம், மாயையின் தொழிற்
பாடே என்பதூஉம், அம்மாயை,
இறைவன் தனது சத்தி சங்கற்பத்
தானே தொழிற்பட வல்லதா மென்
பதூஉம், அதனானே மாயா காரியமாகிய
இவ்வுலகம் இறைவன்பால் நின்றெழுந்
ததா மென உபசார வழக்கான் ஓதப்
பட்டதா மென்பதூஉம், மாயையின்
தனுகரண முடையார் அனைவரும் அம்
மாயை னின்றெழுந்த கால தத்துவ
ஆட்சியுட் கட்டுப்பட்டவர்களே யாவர்
என்பதூஉம், காலம் சடமாகலான்,
சேதனனாகிய இறைவன் திருவருட்
செயற்குத் துணைக் காரணமே யாமென்
பதூஉம், இத்தத்துவ ஆராய்ச்சியாற்
போதரும் பயன் நித்தியா நித்திய
வுணர்வு தோன்றிப் பிறவிக்கஞ்சி வீடு
பேற்றின் அவா மிக்குடைய ராதலா
மென்பதூஉம் ஓராற்றான் எடுத்து விளக்
கப்பட்டன.

சிவஞான முனிவர் சேவடி வாழ்க.

187122

கள் கூவிளங்களாயும் வரும். ஒன்று கலிவிருத்தமாயும் மற்றொன்று கலிநிலைத் துறையாயினும் இவ்விரு பதிகங்களின் மத்திய சீர்கள் ஒரே தன்மையா யிருக்கின்றமையுங் காண்க.

சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய இந் தளப்பண்ணமைந்த பன்னிரண்டு திருப் பதிகங்களும், முதலிற் காணும்போது ஒன்றுக்கொன்று யாப்பில் யாதொரு சம்பந்தமு மற்றவைபோல் காணப்படினும், அவை யெத்தகைய விருத்தமாயினும், இசையில் ஒலி யெழும் பாகங்களாகிய மத்திய பாகங்கள் கூவிள அடுக்கு அமைந்தன வென்றும், அங்ஙனம் கூவிளமே வாராவிடினும் கூவிளத்திற்கு இசையிற் பேதப்படாதனவும் மாத்திரை யளவிற் பேதப்படாதனவுமான ஏனைய சீர்கள் சில இடங்களில் வந்தும்,கூவிளமே அமைந்தவாறு இசை பெறு மியலையுங் காண்க. இந்தளப்பண் எவ்வாறு சங்கீதத்தில் அமையுமென்பது சங்கீதப் புலவர்கள் ஆராய்வாராக. இனி இந்தளப் பண்போல்* தமிழில் சுத்தமான பண்கள் சிலவுள. அவற்றின் யாப்பியலைச் சுந்தரர் தேவார வாயிலாகக் கண்டறிவோமாக.

பண்ணும்பத மேழும்பல
வோசைத்தமி ழவையும்
உண்ணின்றதோர் சுவையுமுறு
தாளத்தொலி பலவும்
மண்ணும்புன லுயிரும்வரு
காற்றும்சுடர் மூன்றும்
விண்ணும்முழு தானானிடம்
வீழிம்மிழ லையே.

—சம்பந்தர் - திருவீழிமிழலை.

[குறிப்பு:—இக்கட்டுரையில் "1" என்னும் குறி எழுத்தின் மேலிடப் படினிவ் வடிவத்தால், குறில், ஓசையில் நெடிலாகுமென்றும், "ப" என்னும் வடிவம் எழுத்தின் மேல் காணப்படின், அந்நெடிலெழுத்து, ஓசையில் குறுகுமென்றும் அறியவும்.]

## உ. தக்கராகம் - பழந்தக்கராகம்

நம்பியாரூரர் தக்கராகத்தில் பாடிய பதிகம் நான்கு*. திருநாவுக்கரசு நாயனார் பாடிய "விடகிலேனடி நாயேன்" என்னும் திருவையாற்றுத் திருப்பதிகமும், "சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள்" என்னும் திருப்பழனப் பதிகமும், பழந்தக்கராகமென வெடுக்கப்பட்டன. திருஞானசம்பந்தர் பதிகங்களில் ஒத்தூராண்பனை பெண்பனையான பதிகமும், சமணருடன் வாதிடும்போது தீயிலிட்டு வேகாதிருந்த "போகமார்த்த" என்னும் (திருநள்ளாறு) பச்சைத் திருப்பதிகமும் இன்னும் 14 திருப்பதிகங்களும் முதல் திருமுறையில் பழந்தக்கராகமென வெடுக்கப்பட்டன. இப்பதினாறு திருப்பதிகங்களுக்கு முன்னர் முதல் திருமுறையில் 24 திருப்பதிகங்கள் பண் தக்கராகமென எடுக்கப்பட்டன. இவற்றை நோக்குங்கால் திருஞான சம்பந்தர் காலத்தில் தக்கராகப் பண்கள் இருவகையாய் நூதன தக்கராகத்தைத் †தக்கராக மென்றும், பண்டைக் காலத்துத் தக்கராகத்தை பழந்தக்கராகப் பண்ணென்றும் அக்காலத்துப் புலவோர் இசையில் பேதப்படுத்தினரென அனுமானிக்கலாம். ஆயி

* திருத்துறையூர் - பண் - தக்கராகம், திருப்பாச்சிலாச்சிராமம் - பண் - தக்கராகம், திருநாட்டியத்தான்குடி - பண் - தக்கராகம், திருக்கலய நல்லூர் - பண் - தக்கராகம்.

அப்பர் தக்கராகப் பண்ணில் யாதொரு பதிகமும் பாடவில்லை. அப்பர் பாடிய இரண்டு பதிகங்களுக்கும் நம்பியாரூரர் பாடிய நான்கு தக்கராகப் பதிகங்களுக்கும் யாப்பில் உவமை காட்டக் கூடவில்லை.

† தக்கராகம் என்பது மேலான ராகம் என்பர். இவ்விராகத்தின் ஏற்றம் திருஞான சம்பந்தர் பாடிய 40 திருப்பதிகங்களால் அறிக.



னும் இக்காலத்தில் பழந்தக்கராகத்திற்கும், தக்கராகத்திற்கும் யாப்பிலக்கண வாயிலாய்ப் பேதங் காட்டி அவற்றின் இசை பேத காரணங்களை நிர்ணயிப்பது இசைவல்ல புலவோர் ஆராய்ச்சியாய் இனி வரக் கூடியதே யாயினும், நமக்குத் தற்காலத்தில் போதுமான ஆதாரவுகள் கிடைக்க வில்லை யாதலால் அத்தொழிலை யினி இசையாராயும் புலவருக்கு இங்கு விடப்பட்டது.

நம்பியாரூரர் காலத்திலே சம்பந்தர் காலம்போல் தக்க ராகத்திற்கும், பழந் தக்க ராகத்திற்கும் யாதொரு பேதமும் வரையறுக்கப்பட வில்லையென்று நாம் அனுமானிக்கலாம். ஏனெனில் சுந்தரர் பாடிய * திருக்கலய நல்லூர் திருப்பதிகமும், *சம்பந்தர் பச்சைத் திருப்பதிகமும் யாப்பில் அபேதமாய்க் காணப்படுகின்றன. முன்னது தக்கராகமென ஏழாந் திருமுறையிலிருக்கின்றது. பின்னது பழந்தக்கராக†மென முதற்றிரு முறையிலெடுக்கப்பட்டது. இவ்விரண்டும், மூன்று காய்ச்சீரும் இறுதியில் ஒரு மாச்சீரும் பெற்ற அடிகளையுடையன. சம்பந்தர் பதிகம் கலிவிருத்தமாய்க் காணப்படுகின்றது. சுந்தரர் விருத்தமோ அத்தகைய கலிவிருத்தம் இரட்டித்த எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தமாகும். சம்பந்தர்

(கருவிளங்காய்) கருவிளங்காய்)
(கூவிளங்காய்) (புளிமா)
*பொரும்பலம துடையசூரன்
றருகனைப் பொருது
(கூவிளங்காய்) (கருவிளங்காய்)
(கருவிளங்காய்) (புளிமா)
பொன்றுவித்த பொருளினைமுன்
படைத்துகந்த புனிதன்
கரும்புவிலின் மலர்வாளிக்
காமனுடல் வேவ
கனல்விழித்த கண்ணுதலோன்
கருதுமூர் வினவில்
இரும்புனல்வெண் டிரைபெருகி
யேலமில வங்க
மிருகரையும் பொருதலைக்கு
மரிசிலின்றென் கரைமேற்
கரும்புனைவெண் முத்தரும்பிப்
பொன்மலர்ந்து பவளக்
கவின்காட்டும் கடிபொழில்சூழ்
கலயநல்லூர் காணே.

—சுந்தரர் - திருக்கலயநல்லூர்.
பண் - தக்கராகம். 9.

*கூவிளங்காய் கூவிளங்காய்
கூவிளங்காய் புளிமா
தோடுடைய காதுடையன்
றோலுடையன் தொலையாப்
பீடுடைய போர்விடையன்
பெண்ணுமோர்பா லுடைய
னேடுடைய மேலுலகோ
டேழ்கடலுஞ் சூழ்ந்த
நாடுடைய நம்பெருமான்
மேயதுநள் ளாறே.

—சம்பந்தர் - திருநள்ளாறு -
பண் - பழந்தக்கராகம். 2.

†மலைபுரிந்த மன்னவன்றன்
மகளையோர்பால் மகிழ்ந்தா
யலைபுரிந்த கங்கைதங்கு
மவிர்சடையா ரூரா!
தலைபுரிந்த பலிமகிழ்வாய்!
தலைவ!நின்றா ணிழற்கீழ்
நிலைபுரிந்தா ரிடர்களையாய்!
நெடுங்களமே யவனே!

திருஞானசம்பந்தர்—திருநெடுங்களம் -
பண் - பழந்தக்கராகம். 4.

பாடிய பச்சைத்திருப்பதிகத் * தக்கராக இசையே வன்றொண்டர் பாடிய இக்கலய நல்லூர் திருப்பதிகத்த தென்பதற்கு இவ்விருவர் திருக்கடைக் காப்புத் திருப்பாட்டுக்களும் முதல் மூன்று சீர்களும் ஒன்றேயாய் விளங்கு கின்றமை காண்க.

இப்பதிகங்களின் சீரியலுக்கும் திருநாவுக்கரசு நாயனார் பழந்தக்கராகப் பதிகங்களுக்கும்*, ஒவ்வொரு அடியினீற்றில் ஒரு நெடில் அதிகமன்றி, வேறு பேதமொன்றும் காணப்படவில்லை.

நம்பியாரூரர் பாடிய திருத்துறையூர் - பண் - தக்கராகம் என்னும் திருப்பதிகம் திருஞானசம்பந்தர் - திரு இடைமருது - பண் - தக்கராகம் என்னும் பதிக நடையிலே †காணப்படுகின்றது. இவ்விரண்டிற்கும் உள்ள வேற்

* i தண்புனலும் வெண்பிறையும்
தாங்கியதாழ் சடையன்
நண்புநல்லார் மல்குகாழி
ஞானசம்பந்த (ன)நல்ல
பண்புநள்ளா றேத்துபாடல்
பத்துமிவை வல்லா
ருண்புநீங்கி வானவரோ
டுலகிலுறை வாரே.
—சம்பந்தர் - திருநள்ளாறு -
பண் - பழந்தக்கராகம். 11.

ii தண்புனலும் வெண்மதியும்
தாங்கியசெஞ் சடையன்
நூமறையோன் றலைக்கலனுக்
சாமமுன் பாடி
உண்பலிகொண் டுழல்பரம
னுறையுமூர் நிறைநீ
ரொழுகுபுன லரிசிலின்றென்
கலயநல்லூ ரதனை
கண்புடைய நன்சடைய
னிசைஞானி சிறுவ
னுவலர்கோ னூர
னுவினயந் துரைசெய்
பண்பயிலும் பத்துமிவை
பத்திசெய்து பாட
வல்லவர்க ளல்லலொடு
பாவமிலர் தாமே.
—சுந்தரர் - திருக்கலய நல்லூர் -
பண் - தக்கராகம். 11.

* i நீரானே ! தீயானே !
நெதியானே ! கதியானே !
யூரானே ! யுலகானே !
யுடலானே யுயிரானே !
பேரானே ! பிறைசூடி
பிணிதீர்க்கும் பெருமானென்
றாராத வையாறற்
கானாய்நா னுய்ந்தேனே !
—அப்பர் - திருவையாறு -
பண் - பழந்தக்கராகம். 6.

ii மண்பொருந்தி வாழ்பவர்க்கு
மாதீர்த்த வேதியர்க்கும்
விண்பொருந்து தேவர்க்கு
வீடுபேறாய் நின்றானைப்
பண்பொருந்த விசைபாடும்
பழனஞ்சே ரப்பனையென்
கண்பொருந்தும் போழ்தத்தும்
கைவிடநான் கடவேனோ ?
—அப்பர் - திருப்பழனம் -
பண் - பழந்தக்கராகம். 5.

†வெண்கோ வணங்கொண்டொரு
வெண்டலை யேந்தி
யங்கோல் வளையாளையோர்
பாகம மர்ந்து
பொங்கா வருகாவிரிக்
கோலக் கரைமே
லெங்கோ னுறைகின்றவி
டைமரு தீதோ ?
—(சம்பந்தர்) திருஇடைமருது -
பண் - தக்கராகம். 3.



றுமை வன்றொண்டர் *நாலசைச் சீர்களை 2-வது சீரில் பெரும்பாலும் உபயோகிப்பதால், சம்பந்தர் பதிகங்களைக் கவனியாதாருக்கு இப்பதிகத்தை அலகிடுதல் †கடினமான காரியமாம். பற்பல விதமாய் அலகிடக் கூடுமாயினும், சம்பந்தர் பதிக யாப்பைக் கண்ணுற்றோர் அவ்வியலையே ஆதரவாகக் கொள்வர். முதல் திருமுறையில் இத்தகைய திருப்பதிகங்கள் பலவுள. ஆகையால் சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரத்தில் "தக்கராகப் பண்" என்பதற்கும் "பண் - பழந்தக்கராக" மென்பதற்கும் யாதொரு பேதமும் இசையில் ஏற்பட்டதாய்க் காணப்பட வில்லை.

7-ம் திருமுறையில் திருப்பாச்சிலாச்சிராமம்-பண் - தக்கராகமென வெடுத்த திருப்பதிகம் 12 பாக்கள் பெற்றது. இப்பதிகம் ஒருவகை எழுசீர்ச் சந்த விருத்தமாய் விளங்குகின்றது. இது நேரிசை எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்போல் "நால்விளம் மும்மா" பெற்றிருப்பினும், இவ்விருத்தம் *இரு பாகமாய் முதற்பாகம் நான்கு சீர்களில் மூன்றாவதும் முதலதும் விளச்சீர்களாயும் இரண்டாவது நான்காவது சீர்கள் மாச்சீர்களாயும், இரண்டாம் பாகமாகிய மூன்று சீர்களில் முதலிரண்டும் விளமாயும் ஈற்றுச்சீர் மாச்சீராயும் வரும்.

இத்தகைய அடியில் முதற்சீரும் நான்காஞ் சீரும் மாச்சீராய் இரண்டு மூன்றாகும் சீர்கள் விளமாயினும் பண் மாறாதென்பதற்கு அத்தாட்சி போல் நம்பியாரூரர் †திருநாட்டியத்தான்குடிப் (பண் - தக்கராகம்) பதிகம் விளங்குகின்றது. இதில் இரண்டாம் பாகமாகிய மூன்று சீர்களுள் இடையில் நின்றது விளச்சீரும் அதன் இரு பக்கத்திலும் மாச்சீரும் காணப்படும். திருப்பாச்சி

*விண்ணோர்ந் தனமேகங்க
ணின்று பொழிய
மண்ணா ரக்கொணர்ந்தெற்றி
யோர்பெண்ணை வடபால்
பண்ணார் மொழிப்பாவைய
ராடும் துறையூர்
அண்ணா ! வுனைவேண்டிக்கொள்
வேன்றவ நெறியே.
—திருத்துறையூர் - பண் - தக்கராகம். 9.

†கந்தம் கமழ்காரகில் சந்தன முந்திச்
செந்தண் புனல்வந்திழி பெண்ணை வடபால்
மந்தி பலமாநட மாடுந் துறையூர்
எந்தா யுனைவேண்டிக்கொள் வேன்றவ
[நெறியே.
ஷை 3.

[குறிப்பு - இதன் முதல் மூன்று அடிகளிலும், சம்பந்தர் பதிகத்திலும் யாதேனும் யாப்பில் பேதமுண்டோ ?]

*ஒருமையே யல்லே னெழுமையும் மடியே
னடியவர்க் கடியனு மானேன்
உரிமையா லுரியே னுள்ளமு முருக்கு
மொண்மலர்ச் சேவடி காட்டாய்!
அருமையாம் புகழார்க் கருள்செயும் பாச்சி
லாச்சிரா மத்தெம் மடிகள்
பெருமைகள் பேசிச் சிறுமைகள் செய்யி
லிவரலா தில்லையோ பிரானார் ?"
—திருப்பாச்சிலாச்சிராமம் -
பண் - தக்கராகம். 11.

†கூடா மன்னரைக் கூட்டத்து வென்ற
கோடிநன் கோட்பு லிசென்னி
நாடார் தொல்புகழ் நாட்டியத் தான்கு
டிநம்பியை நாளு மறவாச்
சேடார் பூங்குழற் சிங்கடி யப்பன்
திருவா ரூரனு ரைத்த
பாடீ ராகிலும் பாடுமின் றொண்டீர்பா
டநும்பா வம்பற் றறுமே.
—திருநாட்டியத்தான்குடி -
பண் - தக்கராகம். 10.

லாச்சிராமத்துச் சுந்தரர் பதிகம்போல் சம்பந்தர் திருப்பேணு பெருந்துறைப் பதிகம் * முதலிய திருமுறையிற் காணலாம். அவற்றுள் திருப்பாச்சிலாச்சிராமத்தில் சம்பந்தர் முயலகன்† தீர்த்த திருப்பதிகம் ஒன்று. அத்தலத்திற்கு வந்தபோது சம்பந்தர் பாடிய அப்பதிகம் சுந்தரர் நினைவிலிருந்ததென்றும் நாம் அனுமானிக்கலாம். இப்பதிகமே, வன்றொண்டர் திருநாட்டியத்தான்குடித் திருப்பதிகத்திற்கும், திருப்பாச்சிலாச்சிராமத் திருப்பதிகத்திற்கும் இடையே நிறுவின், இம்மூன்றும் இசையில் ஒன்று மற்றொன்றாய் மாறும் தத்வத்தை நன்கு விளக்கும்.*

இப்பதிகங்களில் ஒற்றுமையாக, யாப்பில் காணக் கூடியது ஒவ்வொரு அடியிலும் மூன்று விளச் சீர்களுக்கு ஒரு மாச்சீர் இசையில் சமனிறை பெற்று விளங்குதலே யாம்.† விளச்சீர்களிடத்தில் விளங்காய்ச் சீர்களிருப்பின், மாச்சீரிடத்து மாங்காய்ச் சீரும் நிற்கும்.* இதுவே பெரும்பாலும் பழந்தக்கராகமெனக் கொண்ட பதிகங்களிற் காணப்பட்ட தோற்ற மாகும். நம்பியாரூரர் மூன்று விளங்காய்ச் சீர்களுக்குப் பின்னர் ஒரு மாச்சீர் வைத்தும் இப்பண்ணின் இன்னிசையை வெளிப் *படுத்தினர்.

சுந்தர மூர்த்தி நாயனர் பாடிய நான்கு தக்கராகப் பண்ணமைந்த திருப்பதிகங்களே அப்பண்ணில் மிகச்சிறந்த நான்கு வகுப்புகள் என்னலாம்.

---

*நிலனொடு வானு நீரொடு தீயும்
வாயுவு மாகியொ ரைந்து
புலனொடு வென்று பொய்மைக டீர்த்த
புண்ணியர் வெண்பொடி பூசி
நலனொடு தீங்குந் தானல தின்றி
நன்கெழு சிந்தைய ராகி
மலனொடு மாசு மில்லவர் வாழு
மல்குபெ ருந்துறை யாரே.

—சம்பந்தர் - திருப்பேணு பெருந்துறை-
பண் - தக்கராகம். 4.

†வெஞ்சுட ராடுவர் துஞ்சிருண் மாலை
வேண்டுவர் பூண்பது வெண்ணூல்
நஞ்சடை கண்டர் நெஞ்சிட மாக
நண்ணுவர் நம்மைந யந்து
மஞ்சடை மாளிகை சூழ்தரு பாச்சி
லாச்சிரா மத்துறை கின்ற
செஞ்சுடர் வண்ணரோ பைந்தொடி வாடச்
சிதைசெய்வ தோவிவர் சீரே?

—சம்பந்தர் - திருப்பாச்சிலாச்சிராமம் -
முயலகன் தீர்த்தது பண் - தக்கராகம். 3.

[குறிப்பு :—இதில் 2-ம் சீர் விளச்சீராகும் பேதமும் காண்க.]

* சம்பந்தர் பாடிய திருக்கற்குடிப் பதிகத்தை நோக்குக :—

மூத்துவ ராடையி னுரு
மூசுக ருப்பொடி யாரு
நாத்துவர் பொய்ம்மொழி யார்க
ணயமில ராமதி வைத்தார்
ஏத்துயர் பத்தர்கள் சித்த
ரிறைஞ்ச வவரிட ரெல்லாங்
காத்தவர் காமரு சோலைக்
கற்குடி மாமலை யாரே!

—திருக்கற்குடி - பண் - தக்கராகம். 10.

[மற்றும் - திருப்பாம்புரம் - பண் - தக்கராகத்திய திருப்பதிகத்தையும் காண்க :—]

விடைத்தவல் லரக்கன் வெற்பினை யெடுக்க
மெல்லிய திருவிர லூன்றி
யடர்த்தவன் றனக்க ருள்செய்த வடிக
ளனலது வாடுமெம் மண்ணல்
மடக்கொடி யவர்கள் வருபுன லாவம்
வந்திழி யரிசிலின் கரைமேற்
படர்ப்பையிற் கொணர்ந்து பருமணி சிதறும்
பாம்புர நன்னக ராரே.

—சம்பந்தர். 8.

†" தங்கு மோவினை தாழ்சடை மேலவன்
திங்க ளோடுடன் சூடிய
கங்கை யான்றிக ழுங்கா வீரத்தெஞ்
சங்க ரன்கழல் சாரவே "

—சம்பந்தர் - திருக்காயீரம்
பண் - பழந்தக்காரகம். 2,

* i மலைபுரிந்த மன்னவன் றன்
மகளையோர்பால் மகிழ்ந்தாய்
அலைபுரிந்த கங்கைதங்கு
மவிர்சடையா ரூரா!
தலைபுரிந்த பலிமகிழ்வாய்
தலைவநின்ற ணிழற்கீழ்
நிலைபுரிந்தா ரிடர்களையாய்
நெடுங்களமே யவனே.

—சம்பந்தர் - திருநெடுங்களம்-
பண் - பழந்தக்கராகம். 4.

ii கன்னவிலு மால்வரையான்
கார்திகழு மாமிடற்றன்
சொன்னவிலு மாமறையான்
றோத்திரஞ்சேர் வாயினுளான்
மின்னவிலுஞ் செஞ்சடையான்
வெண்பொடியா னங்கையினிற்
கொன்னவிலுஞ் சூலத்தான்
கோளிலியெம் பெருமானே.

—சம்பந்தர் - பண் - பழந்தக்கராகம் 7.

* மலைமடந்தை விளையாடி
வளையாடு கரத்தான்
மகிழ்தவன்கண் புதைத்தலுமே
வல்லிருளா யெல்லா
வுலகுடன்றன் மூடவிரு
ளோடும்வகை நெற்றி
யொற்றைக்கண் படைத்துகந்த
வுத்தமனூர் வினவில்
அலையடைந்த புனல்பெருகி
யானைமருப் பிடறி
யகிலொடுசந் துந்திவரு
மரிசிலின்றென் கரைமேற்
கலையடைந்து கலிகடியந்
தணரோமப் புகையாற்
கணமுகில்போன் றணிகிளருங்
கலயநல்லூர் காணே.

—திருக்கலயநல்லூர் -
பண் - தக்கராகம் 4.

---



# *சமய உணர்வும் ஆராய்ச்சி யறிவும்

[காழி. சிவ. கண்ணுசாமி. B. A.]

"உணர்வு கயிற்றினல் முறுக வாங்கிக் கடைய" இறைவன் முன்னின்றருளுவான் எனக் கூறினீர். அதன் உண்மை இன்மையைக் குறித்து இவண் வாதிடுவே மல்லேம். ஆயினும் அவ்வாறு கண்டா னெருவன் அதைப் பிறரறியுமாறு காட்டுதல் யாங்ஙனம்? அவ்வாறு காட்டுதல் என்பது பண்டைக் காலத்தே இம்மண்ணுலகில் எளிதாயிருந்திருப்பினும், இக்காலத்து அது ஒல்லுமோ? ஆராய்ச்சி யறிவு மிக்க இக்காலத்தில் கண் கூடாகக் கண்ட ஒன்றை யன்றிப் பிறவற்றை அறிவுள்ளோர் நம்பவுந் துணிவரோ?

" அரிக்கும் பிரமற்கு மல்லாத
தேவர்கட்குந்
தெரிக்கும் படித்தன்றி நின்ற
சிவம் வந்துநம்மை
யுருக்கும் பணி கொள்ளு
மென்பது கேட்டுலகை மெல்லாஞ்
சிரிக்கும்... "

* இப்பத்திரிகையின் 6-வது இதழ் 139-வது பக்கத் தொடர்ச்சி.

என்றது யாமறியாததோ? எனவே நாமறிந்த ஒருண்மையைப் பல்லோரு மறியுமாறு தெரித்துக் காட்ட வல்ல ஆராய்ச்சி யறிவென்பது அகன்று பரந்து கால் கொள்ளு மிக்காலத்தே இன்ன தென்றறிய வொண்ணுச் சமய வுணர்வைப் பெரிதாக மதித்து அதைப் பின்பற்றிப் போற்றுதல், பேதைமையின் பண்பாகாதோ? ஆகலான் சமய வுணர்வென்பது இற்றை நாள் வேண்டற்பால தொன்றன்று, ஆராய்ச்சி யறிவே இன்றியமையாது வேண்டப் படுவதாகும் என்பதை யோர்ந்து எல்லீரும் சமய வுணர்வை யகற்றுமின் ஆராய்ச்சி யறிவை மேற்கொண்மின்'' என ஆராய்ச்சி யறிஞர்கள் கூறக் காண்பது இயல்பே. எனினும் அக்காலமே போன்று இக்காலத்திலும் எந்த மக்கட்குழூஉ வாவது, அன்றிப் பகுத்தறிவு படைத்த எம் மகனுவது சமய உணர்வை யறவே கைவிட்டுச் செவ்வே வாழ்ந்து வந்தானென்றோ இனியும் வாழ்வானென்றோ துணிந்து கூறுதற் கில்லை. பகுத்தறி வுள்ள மகன் எனப் பிரித்துக் கொண்ட தென்னையோ வெனின்? அவனே மக்கள் என்னும் பகுதியிற் படுபவன், பகுத்தறிவு பெறு மற்றையோர் சமய வுணர்வற்றோராய் மாக்களின் கூட்டத்தில் வைத்தெண்ணப்படுவர். சமய வுணர்வென்ற பற்றுக்கோடின்றிப் பகுத்தறிவு படைத்தானெனப்பட்ட ஒருவன் உயிர் வாழ்தலில்லை. என்னை? இச் சிற்றுயிர்க்குற்ற துணையும், ஈண்டும், ஆண்டும், நன்மை யளிக்க வல்லதும் சமய வுணர்வே யன்றோ? எவ்வொன்றைச் செய்தல் வேண்டும், அவ்வொன்றை யெவ்வாறு நன்றாகச் செய்தல் வேண்டும், அதிலும் படி வழுவாது எவ்வாறு செய்தல் வேண்டு மென்பதை அறிவுறுத்துவது அவ்வுணர்வே. இதனால் சமய வுணர்வென்பது பகுத்தறிவு படைத்தாரென்று கருதப்படும் ஒவ்வொருவருக்கும் அவர் தம் கருவிலேயே உற்பத்தியான தாகும் என்பதும், சமய வுணர்வின்றி மக்களெனப் படுவோர் நல் வாழ்வு வாழ்த லில்லை யென்பதும் பெறப்படும்.

மேற் பகுத்தறி வற்றோர் மாக்களின் பாற்படுவர் என்று கூறின மன்றே, அதை யொரு சிறிது விளக்கிக் காட்டுதும். பெரும்பாலும் இணை விழைச்சு ஒன்று நீங்கலாக மற்றைத் துறையிலும் விலங்குகளும் பறவைகளும் பழக்கங் காரணமாகவும், பிற்றைக்குப் பயன்படுதல் கூடும் என்னும் பயன் குறித்தும், தத்தம் செயல்களைப் புரிந்து வருகின்றனவே யன்றி அச்செயல் புரிதற்கு இன்றியமையாத ஒரு நிலைமை யேற்பட்டுப் புரித லில்லை. பிற்பகல் பயனெய்துவல் என்று குறித்துக் கொள்ளும் உணர்வாற்றல் அவைகள் மாட்டு இயற்கையிலேயே அமைந்து கிடப்ப தொன்றாகும். ஆகவே அவ்வுணர்வாற்றலால் பின்னர்ப் பயன் பெறப்போவ தறிந்துழி, அவைகள் அப்பய னெய்துதற் கேற்றவாறு தத்தம் செய்கைகளை வழிப்படுத்தி யமைத்துக் கொள்கின்றன. ஆனால், அவ்வாறு ஒழுங்குபடுத்தி யமைக்கப்பட்ட அமைப்புத் தானும் என்ஞான்றும் ஒரே வகைத்தாய் மாறுபாடின்றி யிருந்து வரக்காணலாம். உதாரணமாக :—''கொங்கு தேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி'' ''தினைத்தனை யுள்ளதோர் பூவினிற் றேனுண்டு'' பின் தன்னினத்தார்க்கும் தனக்கும் மாரிக்காலத் துதவுதற்காக வேண்டி மற்றும் பல பூக்களினின்றும் தேனைத் திரட்டிக் கூட்டிடைக் கொண்டு சேர்ப்பதைக் காண்கின்றோம். இப்பயன் கருதித் தேன்தேரும் ஓர் இன்றியமையாத இயற்கை யுணர்ச்சியைத் தவிர வேறு எவ்வுயரிய உணர்ச்சியையும் அத்தேனீ பெற்றிருக்கிற தென்றாவது அன்றிப் பெறும் ஆற்றல் வாய்ந்திருக்கிற தென்றாவது கூறுதற்கில்லை. இன்றேல், எய்ப்பினில் வைப்பாய்த் தேடி வைத்த தேனைக் கூட்டினின்றும் தேனகழ்வோர் அடியோடே எடுத்துச் செல்வது கண்டிருந்தும், பின்னரும் ஒரு காலத்திற் பயன்படக் கூடும் எனக் கருதித் தேன் திரட்டிக் கூட்டி லுய்க்க அத்தேனீ எண்ணுமோ? இனி ஒரு கொடும் புலியை நோக்குவோம். அது பசித்துழி முட்டின்றி உணவு கொள்ளலாமெனக் கருதி அக்கடுவாய் காட்டிடைத் தன்முற்பட்ட எவ்வொரு சிறு விலங்கையோ, மனிதனையோ அடித்துப் புதரிடை யிழுத்துக் கிடத்திச் செல்கின்றது. ஆயினும் அவ்வாறு இறந்துபட்ட விலங்குகள், கொன்ற வரிப் புலிக்கே யன்றி நரி முதலிய பல்வேறு விலங்குகட்கும் எளிய உணவாதலை அஃதறிந் திலது. இவ்வாறே ஒவ்வொரு விலங்கும், பறவையும், மற்றவையும் எவ்வொரு காரியத்தைச் செய்ய முற்படும் போதும் அதைச் செய்தல் இன்றி யமையாத தாகும் என்ற ஒரு காரண உணர்ச்சி யில்லாமல் அதைச் செய்தால் பின்னர்ப் பயன் எய்தற்கூடும் என்ற பயனுணர்ச்சி கருதியே செயல் புரிகின்ற தென்பது போதரும்.



மனிதனே வெனின் அவ்வா றில்லை. அவனது செயல்கள் ஒவ்வொன்றும் பகுத்தறிவென்னும் உயரிய பண்பால் ஆராய்ந்த பின் செயற்படுவ தாகும். எனவே மக்களுக்கும் மாக்களுக்கும் இடையினிற்கும் பெரியதோர் வேற்றுமை யாதெனில் மாக்களின் அறிவாற்றல் இயற்கையுணர்வோடு நின்று விடுகிறது. மக்களினதோ ''சென்ற விடத்தாற் செல விடா தீதொரீஇ நன்றின் பா லுய்க்கும்'' பேராற்றல் வாய்ந்த பகுத்தறிவின் பாற்பட்ட தாகின்றது.

தேனை யுண்ணப் புகும் ஒரு தேனீ அவ்வா றுண்ணப் புகுமுன், தனது செய்கையால் பிறர்க்கு நன்மை விளையுமோ தீமை விளையுமோ என்று தேர்வதில்லை. 'தேனைத் திரட்டுவல்; தேனையுடைய பூ எதிரிருக்கின்றது; அது யாருக் குரித்தாயினென்? உண்டு பசியாறிப் பின்னும் பயன்படுமாறு திரட்டிக் கொள்வல்' என்ற ஒரே கருத்துக் கொண்டு அது பணியாற்றத் தொடங்கி விடுகிறது. மனிதனே அவ்வாறு செய்தற்கில்லை. பிறனொருவனுக் குரிய நிலப் பகுதியிலுள்ள விளைவை இயற்கையாய்த் தன் வயிற்றெழுந்த பசி காரணமாக ஒருவன் தேர்ந்து கொள்வானேல் மறு கணமே அந்நிலமுடையானது சீற்றத்திற்கும் அவன் வாயிலான் நீதியின் ஒறுப்புக்கும் ஆளாக வேண்டுமே என்ற கருத்துப் பிறக்கும், அக்கருத்துப் பிறக்கவே தன்னையே நம்பி உயிர்வாழுந் தன் பெண்டிரும் பிள்ளைகளும் யாதாவர் என்ற கவலை யுண்டாக அதன்மேல் ஒன்றன் பின்னொன்றாய்ப் பல கருத்துகள் கிளைக்கக் குன்று முட்டிய குரீஇ யெனத் திகைத்து நிற்பான்.

உணவு தேடுதல் மக்கள், மாக்கள் என்ற இரு பாலார்க்கும் இன்றியமையாத தாகும். ஆயினும் ஒரு தேனீயையோ, அல்லது கடுவாய்ப் புலியையோ போன்று மனிதன் எண்ணிய வுடனே அதைத் தேடிக் கொள்வதற்கில்லை. இவன் மேற்கொள்ளும் பணி

யால் விளையும் பலன்கள் நன்மையும் தீமையும் விரவியவாய்ப் பலப் பலவாகக் காணப்படுகின்றமையின் உடனே ஒரு முடிவிற்கு வர முடியாதவனாகின்றான். இவ்வாறு பன்னிலையவாயும் பல்வகைத்தாயும் பயன்கள் விளையுமாறு காண்டலோடன்றி அப்பயன்கள் தனக்கே யன்றி மற்றையோர்க்கும் நன்மையையோ தீமையையோ உடனளிக்க வல்லவா யிருக்கின்றன என்பதையுங் காணவே, பகுத்தறிவு படைத்த ஒருவன், உள்ளத்திடை இயற்கையா யெழுந்த உணர்வின்வழி ஒரு காரியத்திற் றலையிடுமுன் பன்முறை சிந்தித்தே இறங்க வேண்டுமென்பதை யுணர்ந்து கொள்கிறான். "மனம்போன போக்கெல்லாம் போக வேண்டா" மென்று தமிழறிஞர் சுடச்சுடக் கூறியது மாக்களைப் போலன்றி மக்களாகத் திகழுமின் என்று உணர்த்தற்கே யன்றோ?

இவ்வாறே, இவ்வுணவு தேடுதல் போன்ற மற்ற இன்றி யமையாத செயல்களிலும் பகுத்தறிவு படைத்த மனிதன் உணர்ச்சி வயப்பட்டோ, பின்னெய்த விருக்கும் பயன் குறித்தோ உடனே ஒரு முடிவிற்கு வரமுடியாதவனாகவே இருக்கிறான். எனவே மாக்களைக் குறித்ததோர் செயற்கட் செலுத்தும் அதேநிலை மக்களுக்குச் சாலாது என்பது வெளிப்படை. வேண்டுமெனில் ஒரு மகன் தானும் மாக்களை யொத்தவனே யெனக் கருதி அவைகளைப் போன்றே நாளும் உயிர் வாழ்ந்து வரினும் வரலாம். இன்றேல், பகுத்தறிவு படைத்தவனாயின், தான் தனிப்பட்டு உயிர் வாழ்ந்திட வந்தவனல்ல, குரவரும் கிளைஞரும் குலத்துரிய துணைவரும், நாட்டு நன்மக்களும், இருக்கின்றனர், என்ப தோர்ந்து ஊழி யூழியாய்த் தொடர்ந்து வந்து கொண்டிருக்கும் இத்தரையிடையுள்ள எண்ணிற் பல்கோடி உயிர்களில் தானும் ஒருவனாதலால் அவ்வுயிர்களுடன் சேர்ந்தே தான் செய்யவிருக்கும் கடமைகளின் நன்மை தீமையை உணரவேண்டும் எனச் சிந்திப்பினுஞ் சிந்திக்கலாம். ஆதலின் பகுத்தறிவு படைத்த மனிதன் தான் ஒரு காரியத்தைச் செய்யப் புகுமுன் அது செய்து முடித்தற்கு வேண்டிய அவசியத்தையும், அதனால் தனக்கும் பிறர்க்கும், நாட்டார்க்கும் விளையும் நன்மை தீமைகளையு மோர்ந்து செயலாற்ற வேண்டியவனாக விருத்தல் மட்டுமன்றி, தான் செய்ய விருக்கும் ஒரு செய்கையால் இக்கண்ணகன் ஞாலத்தில் தானியற்றுதற் குரிய கடமைகளுக்கு முரண்பாடின்றி நடந்து கொண்டவனாவேனோ என்னும் தத்துவம் நிறைந்த வித்தக நினைவுங் கொள்ள வேண்டியவனாக விருக்கிறான். இவ்வாறு, பரந்ததோர் அண்டமா யுள்ள இத்தரையில் தானும் ஒரு சிறு அணுப்பகுதியாயமைந்தவன் என்ப துணர்ந்து தன் செயல்கள் தன்னை யன்றித் தான் வதியுமண்டத்திற்கும் ஏற்றவாறு இருத்தல் வேண்டுமென்ற ஒரு நியதி யமைத்துக் கொள்ளுதலேதான் பண்டு சமய உணர்வெனப் பட்டதும், இன்றும் சமய உணர்வெனப்படுவது மாகும். ஆகவே, பகுத்தறிவுள்ள எவனுக்கும், எக்குழூஉவிற்கும், இத்தகைய சமய உணர்வென்பது உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாப் பற்றுக் கோடாகு மென்பதும் அவ்வுணர்வு பகுத்தறிவின் பகுதியே யென்பதும் தெள்ளிதில் விளங்கும்.

---

# செய்தித் திரட்டு

['லோகோபகாரி']

## ஸ்திரீக்கும் ஸ்திரீக்கும் விவாகம்

மலாய் நாட்டைச் சேர்ந்த கோலாலம்பூரிலிருந்து பின்வரும் செய்தி கிடைத்துளது.

சையாம் தேசத்தின் தலை நகரமாகிய பாங்காங் என்ற இடத்தில் சில மாதங்களுக்கு முன்பு தான் 32-வயதான நாங்ஜாய் என்ற ஸ்திரீக்கும், நாங்ஸாதாம் என்ற மற்றொரு ஸ்திரீக்கும் விவாகம் நடந்தது. இதில் அதிசயமான விஷயம் என்ன வெனில் வயதில் முதிர்ந்த நாங்ஜாய் என்பவள் 26-வயதுள்ள நாங்ஸா என்னும் இளமங்கையை மணம் புரிந்து கொண்டது தான். இத்தகைய நூதன விவாகத்தை உலகம் இதற்கு முன்பு கண்டதேயில்லை. விவாகம் சகல ஆடம்பரங்களுடனும் நடை பெற்றது. கண்களைக் கவரத் தக்க உடுப்புக ளணிந்து கொண்ட ஐந்து புத்த வகுப்பினரின் முறைப்படி விவாகம் நடந்தது. இதனால் பாங்காக்கிலும், அதைச் சுற்றியுள்ள இடங்களிலும் விசேஷ பரபரப்பு ஏற்பட்டு விட்டது.

நாங்ஜாய் என்பவள் ஓர் அழகு வாய்ந்த கப்பல் படை உத்தி யோகஸ்தரின் மனைவியா யிருந்தனள். இவ்விருவருக்கும் விவாகரத்து ஆய்விட்டதோ என்னவோ தெரியவில்லை. தான் ஓர் கப்பல் படை உத்தியோகஸ்தரின் மனைவி என்பதை அறிந்தும் பலர் அடிக்கடி தனக்குப் பணம் கொடுத்து வந்ததாக அவளே கூறுகிறாள். அருகிலுள்ளவர்களால் ஏற்படும் உபத்திரவத்தைத் தாங்க முடியாமல் கப்பல் உத்தியோகஸ்தர் பாங்காக்கை விட்டு ஸானுத்ஸா கோர்ன் என்ற இடத்துக்குச் செல்ல வேண்டி நேரிட்டது. பாங்காக்கிலேயே இருந்தால் தமது உயிருக்கும் ஆபத்து நேரிடுமென அவர் அஞ்சினார். தனக்கு ஓர் இளைய சகோதரரும், பார்த்துக் கொள்வதற்கு ஓர் பழத் தோட்டமு மிருந்ததால் நாங்ஜாய் தன் கணவனைப் பின் தொடர்ந்து செல்ல வில்லை. இனிமேல் கலியாணம் செய்து கொள்வதில்லை என அவள் தீர்மானித் திருக்கையில், சந்தோஷமாயிருப்பதற்காக ஓர் ஸ்திரீயை விவாகம் செய்து கொள்ளும்படி அவளுக்கு யோசனை கூறினார். அதன் மேல் நாங்ஜாய் ஓர் சரியான பெண்ணைத் தேடத் தொடங்கி, தன் இளம் பிராயத்திலிருந்து தன் தோழியாயிருந்து வந்த ஒருத்தியைப் பொறுக்கினள். அவள் பெற்றோரும் விவாகத்துக்கு இணங்கியதால் இருவருக்கும் [illegible] நடந்தது. ஆனால் துரதிர்ஷ்ட வசமாகச் சென்ற சில தினங்களுக்கு முன்பு யாரோ ஒருவன் இருட்டிலிருந்து நாங்ஜாயைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்று விட்டானாம்.

---

## ஹிந்து முஸ்லிம் விவாகம்

குண்டூரில் அசிஸ்டண்டு எஞ்சினீரான ராஜ கோபால் ஐயங்காரின் மூன்றாவது மகளான ஜானகி யென்ற மாது (22) குண்டூர் ஜில்லாவில் பாரஸ்டு ஆபீசரான (காட்டிலாகா அதிகாரி) அப்துல் காசிம் (40) என்பவரை மணந்து கொண்டாள். மாப்பிள்ளைக்கும் மாமனாருக்கும் நெடு நாட் பழக்கமாம். பெண் சென்னை வைத்திய கல்லூரியில் படித்துக் கொண் டிருக்கிறார்கள். இருவரும் பிரம ஞான சங்கத்தைச் சேர்ந்தவர்கள். மாப்பிள்ளை முஸ்லி மாகவும் மனைவி ஹிந்துவாகவும் இருப்பார்களாம். பெண் காசியிலும், டில்லியிலும் கல்வி கற்றுக் கொண் டிருந்த பொழுது முஸ்லிம்களுடன் சேர்ந்து பழகி வந்தாளாம். அப்துல் காசிம் முதல் மனைவி எட்டு வயதுப் பெண் ஒன்றைவிட்டு இறந்து போனார். அவரை இரண்டாம் முறை கலியாணம் செய்துகொள்ளுமாறு ஐயங்கார் நண்பர் என்ற முறையில் வற்புறுத்தி வந்தாராம். கடைசியாக அப்துல் காசிம் ஐயங்கார் பெண்ணைக் கலியாணம் செய்து கொள்வதாக இசைந்தாராம்.

---

## மாயா மாளிகை

பாரிஸ் நகரில் ஜார்ஜ் நேப் என்பவரின் வீடு, கதைகளில் சொல்லப்படும் மாயா மாளிகைகளை ஒத்து விளங்குகிறதாம். கண்ணைப்பறிக்குமாறு தேஜோ மயமாய் ஜொலிக்கும்அந்தமாளிகையின் வாயிலில்அமைந்திருக்கும் ஒரு விசித்திரக்கண்ணாடியின் மூலமாய், மாளிகையின் உள்ளே யிருப்பவர்கள் வரும் விருந்தினர் யார் என்று கண்டு கொள்வார்களாம். அவசியமானால் டெலிபோன் மூலம் வந்த காரியத்தைக் கேட்டுத் தெரிந்து கொண்டு, உள்ளே விடலாம் என்று தோன்றினால் ஒரு பொத்தானை அழுத்த வேண்டியதுதான். உடனே வாயிற் கதவு திறந்து கொள்ளும். உணவருந்தும் போது இன்னும் பல மாயா விநோதங்களைப் பார்க்கலாம். விருந்தினர் வரிசையாக மேஜையைச் சுற்றி உட்கார்கிறார்கள். ஒரு பொத்தானை அழுத்தின உடனே சுவரில் ஒரு வாசல் திறக்கின்றது. உடனேஉணவுப் பண்டங்கள் கிரம

பிய பாத்திரங்கள் வரிசை வரிசையாக வருகின்றன. மற்ெருரு பொத்தானை அழுத்தினுல் அப்பாத்திரங்கள் மேஜையைச் சுற்றி வருகின்றன. விருந்தினர் தத்தமக்கு வேண்டிய வற்றை எடுத்துக் கொள்ளலாம். வேெருரு பொத்தானை அழுத்தினுல் அப்பாத்திரம் வந்த வழியே போய் விடுகின்றது. சமையல் செய்யும் முறை இன்னும் பெரிய விந்தையாம். ஒரு பொருளை வேக வைக்க இவ்வளவு உஷ்ணம் வேண்டுமென்று அறிவிக்கும் கடிகாரம் சமையலுக்கு வெப்பமளிக்கும் யந்திரத்தில் பொருத்தப்பட்டுளது. பொருள் நன்ருய் வெந்ததும் கடிகாரம் உஷ்ணத்தை நிறுத்திவிடும். இவ்வளவு மாயா விநோதங்களும் மின்சார சக்தியின் உதவி கொண்டே நடை பெறுகின்றனவாம்.

---

## ஆச்சரிய இயந்திரம்

அமெரிக்காவில் ஆர். ஜெ. வென்ஸ்லி கண்டுபிடித்த யந்திரம் நியூயார்க்கில் டெலிபோனில் செய்தியைக் கேட்கக் கூடிய பிடியை வளையத்திலிருந்து எடுத்து கிராமபோன் ரிகார்டு மூலம் ஒரு எண்ணைக் கூப்பிடுகின்றது. அவருடைய தலைமைக் காரியாலயத்திலோ ஒரு புதுவிதமான பேசும் இயந்திரமே கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அந்த இயந்திரம் பணத்தை வாங்கிக் கொள்கிறது; சில்லரையைக் கொடுக்கிறது; சாமான்களை ஒப்புவிக்கிறது; 'வந்தனம்' என்று கூறுகிறது; மற்றும் பல சொற்களை உச்சரிக்கிறது. இவ்வியந்திரங்களைக் காரியாலயங்கள், ரயில்வே ஸ்டேஷன், பஸ் ஸ்டேஷன் முதலிய இடங்களில் தேசம் முழுவதும் வைக்க ஏற்பாடு செய்து வருகிருர்கள்.

---

## பெண் விடுதலை

ஆப்கானிஸ்தானத்து அமீரும் அரசியும் ஐரோப்பாவுக்கு யாத்திரை போய் விட்டுத் திரும்பிய பின்னர் அரசியாரும் அரண்மனைப் பெண்களும் கோஷா வழக்கத்தை முற்றிலும் ஒழித்து விட்டுப் பகிரங்கமாக நடமாடுகிருர்கள். பெண் விடுதலை யியக்கத்தில் இது தலைமையானது. இந்தியாவிலுள்ள முஸ்லிம் மாதர்களுக்கு ராணி சௌரியா வழி காட்டியிருக்கிருர். கோஷா வழக்கத்தை ஒழிக்க வேண்டுமென்பதால் ஐரோப்பிய மாதர்களைப் போல ஆடவர்களுடன் வரம்பு மீறிக் கூடி ஆடிக் களிக்க வேண்டு மென்று நமது நோக்கமன்று. ஆனுல் இறைவன் படைத்த மக்களில் ஒரு பாலர் இறைவனது காற்றையும் ஒளியையும் நுகராமல் மூலையிலே முக்காடிட்டுக் கிடக்கும் வழக்கமே ஒழிய வேண்டுமென்று நாம் விரும்புகிருேம்.

---

## ஐரோப்பிய மாதின் யோகக்காட்சி

உலகின் நீதி நிர்வாக சரித்திரத்தில் ஒப்பற்றதான ஒரு சோதனை கிழக்குப் பிரஷ்யாவில் (ஜெர்மனி) இன்ஸ்டர்பக் என்னும் இடத்தில் சமீபத்தில் நடந்ததாக ஆங்கிலப் பத்திரிகைகள் வெளியிட்டிருக்கின்றன. ஒரு பெண்மணி ஒரு விவசாயப் பள்ளிக்கூடத் தலைவரின் மனைவி மனேவசியம் மானதத்தந்தி முதலிய துறைகளில் நிபுணர்கள் கூடியிருக்க அவள் தன்னிடம் இருப்பதாகச் சொல்லிக்கொள்ளும் சக்தி யுண்மைதானு என்று சோதிக்கப்பட்டாள்.

அவள் முதலில் தன்னைத்தானே அறிதுயில் நிலைக்குக் கொண்டுபோகும்படி சொல்லப்பட்டாள். அவ்வாறு அவள் அறிதுயில் நிலையை அடைந்ததும், ஏகாந்தமான ஒரு கோட்டையில் நடந்த களவைப்பற்றி அவளைக் கேட்டார்கள். சென்ற பிப்ரவரியில் பிரஷ்யாவின் எல்லைப்புறத்திலுள்ள ஷிலாஸ் கோட்டையில் அந்தத் திருட்டு நிகழ்ந்தது. அதற்கு முன் அந்தமாதுக்கு அந்தத்திருட்டைப் பற்றித் தெரியாது என்று முதலில் மிகுந்த எச்சரிக்கையுடன் நிச்சயம் செய்து கொள்ளப்பட்டது.

அறிதுயில் நிலையில் அவள் கூறியவற்றுட் சிறு தவறுகள் சில இருந்தபோதிலும் முக்கியமான அம்சங்களில் நடந்த விஷயங்களுடன் அவை முழுதும் ஒத்திருந்தன.

முதலில் அந்த மாது நீதிமன்றத்தின் நடுவில் ஒரு நாற்காலியில் அமர்ந்து தன் கையிலிருந்த தீக்குச்சியை உற்றுப் பார்த்துக் கொண்டே இருந்தாள். மூன்று நிமிஷங்களுக்கெல்லாம் அவளது தலை பின்னுற் சாய்ந்தது. கோர்ட்டிலிருந்த டாக்டர்கள் அவளைப் பரிசோதித்து அவள் சாதாரண விழிப்பு நிலையில் இல்லை என்று தெரிவித்தார்கள்.

பின்னர் மேற்படி திருட்டுச் சம்பந்தமாக அறிந்த வேட்டைக் காரன் ஒருவனும், வியன்னுவிலிருந்து இதற்கென்று தருவிக்கப்பட்ட டாக்டர் தாமா என்னும் மனேதத்துவ நிபுணரும் அவளிடம் வந்தார்கள். பின்னர் இவர்கள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் [illegible] ன்ஞள்.

—'சிவநேசன்'

18722

சிறந்த கட்டுரைகள்! ஏராளமான படங்கள்!!

பொதுஜன நன்மையை நாடி இடைவிடாது உழைத்துத் தமிழர் உள்ளத்தில் தேசீய உணர்ச்சியை எழுப்பிவரும் சிறந்த தேசீய பத்திரிகை.

## "தமிழ் நாடு"

ஒன்றே

ஒவ்வோர் இதழிலும் அழகு, வீரம், அன்பு, சத்தியம், ஹாஸ்யம், தேசாபிமானம், சமூக சீர்திருத்தம் முதலியவைகள் இனிய செந்தமிழ் நடையில் மிளிர்கின்றன.

பல அறிவாளிகள் எழுதிய கட்டுரைகளும், ஏராளமான படங்களும், வேடிக்கைப் படங்களும் வெளி வருகின்றன.

அறிவை வளர்க்க விரும்பினால் இன்றே

"தமிழ் நாடு" (வாரப்பதிப்பு)

சந்தாதாரராகுங்கள்

சந்தா விவரம்

| | உள் நாடு | வெளி நாடு | தினப் பதிப்பு |
|---|---|---|---|
| 1-வருஷம் | ரூ. 5 0 0 | ரூ. 6 0 0 | ரூ. 20 0 0 |
| 6-மாதம் | ரூ. 3 0 0 | ரூ. 3 8 0 | ரூ. 10 0 0 |
| 3-மாதம் | ரூ. 1 14 0 | ரூ. 2 0 0 | ரூ. 5 0 0 |
| Ex. | | 1-மாதம் | ரூ. 1 12 0 |

மானேஜர் :—"தமிழ் நாடு," சென்னை.



# கந்தபுராணச்சுருக்கம்

## மூலமும் பொழிப்புரையும் விருத்தியும்

இந்நூல் ஸ்ரீமத் - சம்பந்தசரணாலய சுவாமிகளால் சொற்சுவை, பொருட்சுவை, சந்தச்சுவை முதலியன ததும்ப 1000 பாடல்களாகப் பாடப்பட்டது. கடல்போல் பரந்துகிடக்கும் பெரிய கந்தபுராணக் கதையை இனிது விளக்குவது. மூலத்திற்கேற்ற பொழிப்புரையும், விருத்தியும் பலநூற் பிரமாணங்களுடன் எழுதப்பட்டுள்ளன. டிம்மி 8-பக்க அளவில் நல்ல காகிதத்தில் அச்சிடப்பட்டது. 496 பக்கங் கொண்டது.

**காலிகோ பயிண்டு விலை ரூ. 3.**

**முருகவேள் புத்தகசாலை,**
**இராயப்பேட்டை, சென்னை.**

இந்தியாவில் சிறந்தது என்று அனுபவசாலிகளால் மதிக்கப்படும்

**ருக்மணி குக்கர்** என்னும் சமையல் அடுக்கு உங்கள் வீட்டில் இருக்கிறதா? இல்லாவிட்டால் இன்றே ஒன்றைத் தருவியுங்கள்.

இதனால் ஒருமணி நேரத்தில் சாதத்துடன் பல பதார்த்தங்களை நீராவியினால், சிரமமில்லாமலும், சமையற்காரனுடைய உதவியில்லாமலும், மிகக் குறைந்த செலவில் தயார்செய்யக்கூடும்.

கனம் எட்டியாபுரம் ராஜா அவர்கள் எழுதுகிறார் :—மற்ற குக்கர்களை விட ருக்மணி குக்கரே பூரண திருப்தியைக் கொடுக்கிறதென உறுதியாய்ச் சொல்லுகிறேன். இதில் சமைக்கப்படும் ஆகாரம் அதிக சத்துள்ளதாயும், தேகத்திற்கு ஆரோக்கியத்தைக் கொடுப்பதாயும் இருப்பதோடு, மற்ற குக்கர்களில் காணப்படும் துர்வாசனை இல்லாததாயும் இருக்கிறது.

ஸ்ரீமான் டாக்டர் P. வரதராஜலு நாயுடு அவர்கள் எழுதுகிறார்:—நான் தங்கள் குக்கரை என்னுடைய வீட்டில் தினந்தோறும் சமையல் செய்வதற்கு உபயோகப்படுத்தி வருகிறேன். இதில் சமைக்கப்படும் ஆகாரம் மிகவும் நேர்த்தியான ருசியை அடைகிறது.

1, 2, 4, 6, 8 பேர்களுக்குத் தகுதியான குக்கர்கள் முறையே
13, 18, 22, 27, 33 ரூபா விலை.

ஒன்று இன்றே தருவியுங்கள். விவர புஸ்தகம் இனாம். ஏஜண்டுகள் தேவை.

1-7-28.
31-12-28.

**ருக்மணி குக்கர் கம்பனி,**
இராயபுரம், (11) மதராஸ்.






34 ஆண்டுகளாய் நிலவும்
வாரப் பத்திரிகை

பத்திராதிபர் :
பரலி - சு. நெல்லையப்ப பிள்ளை

தமிழர்கள் புத்துயிரும் புது வாழ்வும் பெறுமாறு உழைத்து வரும் வாரப் பத்திரிகை. உலகத்தில் அந்தந்த வாரத்தில் நடக்கும் செய்திகளெல்லாம் 'லோகோபகாரி'யில் சுருக்கமும் விளக்கமுமாக வெளிவரும். பாரததேசம் சகல துறைகளிலும் சுயராஜ்யம் பெற்று, லோகமெல்லாம் க்ஷேமம் அடைய வேண்டுமென்பதே 'லோகோபகாரி'யின் நோக்கம். உலகத்தில் அற நெறியும் அன்பு நெறியும் வளர்ந்து இன்பம் நிலவுமாறு லோகோபகாரி நெடுங்காலமாக உழைத்து வருகிறது. இதனைத் தமிழ் மக்கள் ஆதரிக்கவேண்டும்.

வருஷ சந்தா ரூபாய் நான்கு ; வெளி நாட்டுக்கு ரூபாய் ஆறு.
மாதிரிப் பிரதி இனாம்.

"லோகோபகாரி" பத்திரிகாலயம்,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

Ex.



Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah. Edited and Published by Mani, Thirunavukkarasu Mudaliar for the Saiva Siddhanta Maha Samajam.